# உதயன்

விலை ரூபா 7.00

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 13 திங்கட்கிழமை (27-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:62




கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நேற்று நடைபெற்ற குடியரசு தின கொண்டாட்டத்தில் இந்தியத் தூதர் நிருபம் சென் தேசியக் கொடியேற்றி படைஅணி வகுப்பை ஏற்றபோது....

## இறுதித் தீர்வு வரும்போது அது கருத்துக் கணிப்புக்கு

கொழும்பு,ஜன.27

சமாதானப் பேச்சுக்களின் முடிவில எட்டப்படுகின்ற இறுதித் தீர்வு தொடர்பான உடன்பாட்டில் இரு தரப்புக்களும் கைச்சாத்து இடுவதற்கு முன்னர் அது மக்கள் கருத்துக் கணிப்புக்கு விடப்படும்.

இத்தகைய கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்துவதற்கு பிரதமர் ரணில் திட்டமிட்டிருக்கிறார் என்று அரசு சார்பு வாரப்பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

ஓர் அரசியல் தீர்வு எட்டப்படும் போது அதனை நாட்டுமக்கள் முன் சமர்ப்பித்து அதனை மக்கள் ஏற்றுக் கொண்டால் மக்களின் விருப்பத்துடன் அது நிறைவேற்றப்படும். அப்போது அது எனது தீர்மானமாக அன்றி மக்களின் தீர்ப்பாக இருக்கும் - என்று பிரதமர் கூறியிருக்கிறார் - எனவும் அப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (ஐ)

# சமாதான முயற்சி வெற்றிபெற இந்தியா கைகொடுத்து உதவும்

## சுதந்திர தின விழாவில் தூதர் சென் தெரிவிப்பு

கொழும்பு,ஜனவரி27

**இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்கும் அரசியல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இந்தியா கைகொடுத்துதவும். இலங்கைக்கான இந்தியத்தூதர் நிருபம் சென் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை சீர்குலைக்கவோ, கொச்சைப்படுத்தவோ முடியாது என்றும் அவர் உறுதிபடக் தெரிவித்திருக்கிறார்.

நேற்றுக்காலை இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'இந்தியா இல்லத்தில்' இந்தியாவின் 54ஆவது குடியரசுத்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழிப் பிரஜைகளும் வர்த்தக மற்றும் முதலீட்டாளர்களும் பெருமளவில் இக்கொண்டாட்டங்களில் கலந்து கொண்டனர்.

காலை எட்டு மணிக்கு தூதுவர் நிருபம்சென், இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தொடர்ந்து இந்திய இராணுவத்தின் கலாசார அணிவகுப்பு இடம்பெற்றது.

தூதுவர் அங்கு மேலும் கூறியதாவது:-

குண்டு வெடிப்புகளும் மரண ஓலங்களும் இப்பொழுது இலங்கையில் இல்லை. மக்கள் அமைதியாக வாழ்கின்றனர்.

இந்த அமைதியும் சமாதானமும் நிரந்தரமாக அமையவேண்டும் என்பதில் இந்தியா பெரிதும் அக்கறை கொண்டுள்ளது.

ஒரு நாட்டில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் அங்கு வாழும் மக்கள் மத்தியில் அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டும். இந்த வழியில் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து சமாதான பேச்சுக்களை நடத்துகின்றது. இப்பேச்சுகள் வெற்றியடைய வேண்டும் என்பதே இந்தியாவின் ஆசை. இதற்காக சகல உதவிகளையும் இந்தியா வழங்கும்.

- இவ்வாறு கூறிய இந்தியத் தூதுவர் இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் விடுத்த குடியரசு தினச் செய்தியை வாசித்தார். (ஐ)

## கண்டியில் மூன்று கடைகள் தீக்கிரை

கண்டி,ஜன.27

கண்டி மாவட்டத்தில் கொட்டுக்கொடல என்ற இடத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் மூன்று கடைகள் கொண்ட கட்டடத் தொகுதி எரிந்து போனது.

'சிற்றி மிஷன்' கட்டடத்துக்கு முன்பாக உள்ள கடைத்தொகுதியிலேயே தீ ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்தினால் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்தினர். விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை. (ஐ)

### விகாரைகளைப் பாதுகாக்க முன்வந்தமைக்காக

## இந்திய அரசுக்கு நன்றி கூறுகிறது 'சிஹல உறுமய'

கொழும்பு,ஜன.27

வடக்கு - கிழக்கில் புராதன பௌத்த விகாரைகளைப் பாதுகாக்க இந்திய அரசு முன்வந்ததையிட்டு 'சிஹல உறுமய' மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் இந்த முயற்சிக்கு கலாசார அமைச்சு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று 'சிஹல உறுமய' கல்வி கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்குக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு பிரதேசம் தமிழர்களின் தாயகம் அல்ல என்பதற்கு உள்ள சிறந்த சான்று அப்பிரதேசங்களிலுள்ள பௌத்த விகாரைகளாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த விவகாரங்கள் குறித்து அரசு - புலிகள் வியாழனன்று பேச்சு!

### கருணா - ஒஸ்ரின் மட்டக்களப்பில் சந்திப்பர்

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் சரிவர நடைமுறைப்படுத்துவது, போர் நிறுத்த மீறல்கள் குறித்து ஆராய்வது ஆகியவை தொடர்பாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. இச்சந்திப்பு மட்டக்களப்பில் நடைபெறும்.

அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் விடுதலைப் புலிகளின் சார்பில் கிழக்குப்பிராந்திய சிறப்புத் தளபதி கேணல் கருணாவும் இச்சந்திப்பில் கலந்துகொள்வர்.

இச்சந்திப்பு தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

எதிர்வரும் வியாழக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பேர்னாண்டோவுக்கும் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் கருணாவுக்குமிடையே நடைபெறும் சந்திப்பில் கண்காணிப்புக்குழுத் தலைவர் ட்ரொண்ட் புறுஹௌவ்டேயும் கலந்துகொள்வார் என்று நோர்வேத் தூதரகத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-ம)

## அமைச்சர் மொறகொட நேற்று மட்டக்களப்புக்கு திடீர் விஜயம்

### கண்காணிப்புக்குழு, முஸ்லிம் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

மட்டக்களப்பு,ஜன.27

அமைச்சர் மிலிந்தமொறகொட நேற்று மட்டக்களப்புக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். அமைச்சருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மற்றும் இராணுவ, பொலீஸ் உயரதிகாரிகளும் வந்திருந்தனர்.

23-3 ஆவது படைத்தலைமையகத்தில் பிரிகேடியர் பாலசூரிய தலைமையில் பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டமொன்றிலும் அமைச்சர் மிலிந்த மொறகொட கலந்துகொண்டார்.

அத்தோடு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள், முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோரையும் அமைச்சர் சந்தித்துப்பேசினார். மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையுடனான ஒரு சந்திப்பிலும் அமைச்சர் கலந்துகொண்டார். இச்சந்திப்புக்களின்போது மட்டக்களப்பில் புலிகள் சிறுவர்களைப் படையில் இணைத்துக்கொள்வது, கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சமாதான முயற்

(14ஆம் பக்கம் பார்க்க)

### 'ஓயாத அலைகள்' நடவடிக்கையின் போது

## இறந்த 540 படையினருக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு

### நடத்துமாறு நீதிமன்றம் ஆலோசனை

கொழும்பு,ஜன.27

'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையில் கொல்லப்பட்டு தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படாது வவுனியாவில எரிக்கப்பட்ட 540 படையினருக்கு கொழும்பில் அவர்களது உறவினர்கள் முன்னிலையில் மரியாதை செலுத்துவது குறித்து பரிசீலனை செய்யுமாறு படை அதிகாரிகளுக்கு வவுனியா மாவட்ட நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆலோசனை வழங்கியுள்ளார்.

காணமற்போன படையினரது அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி தர்மவத்தன தலைமையில் அன்னையர் குழு ஒன்று வவுனியாவுக்குச் சென்றபோது 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையில் கொல்லப்பட்ட படையினரது சடலங்களை எரித்த இடங்களைச் சென்று பார்வையிட்டுள்ளது. அந்த இடத்தில் எலும்புத்துண்டுகள் எரிந்த நிலையில் சப்பாத்துகள் என்பவை காணப்பட்டதை அடுத்து அன்னையர் முன்னணியினர் இது குறித்து வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளின் சடலங்களுக்கு படையினர் உரிய மரியாதையினை வழங்கவில்லை என்றும், இந்த இடத்திற் காணப்படும் எலும்புகளை டி.என்.ஏ. பரிசோதனைக்கு உட்படுத்தி தமது பிள்ளைகளின் எலும்புகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறு படைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரி அன்னையர் முன்னணியினர் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம்

## படையினருக்கு எதிராக தமிழ்க் காங்கிரஸ் வழக்கு

கொழும்பு,ஜன.27

அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இராணுவத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக மனு ஒன்றைத் தாக்கல் செய்ய அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தயாராகி வருகிறது.

வடக்கு, - கிழக்கு அதி உயர் பாதுகாப்பு வலய பிரகடனம் காலாவதியாகிவிட்டது. அவசரகால சட்டத்தின் கீழேயே இப்பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், இரண்டாயிரம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதுடன் அதி உயர் பாதுகாப்பு வலயம் இல்லாது போய்விட்டது. இப்போதும் படையினர்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஜனாதிபதியுடன் கூட்டுச்சேரும் எண்ணம் எதுவும் கிடையாது!

## தனது நிலையைத் தெளிவுபடுத்துகிறார் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஜன.27

ஐக்கிய தேசியக்கட்சி அரசுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் எனக்கு சில முரண்பாடுகள் இருக்கின்றன என்பது உண்மைதான்.

ஆனால், அதற்காக ஐ.தே.கட்சியிலிருந்து விலகி எந்தக்கட்சிகளுடனும் இணையும் நோக்கமோ ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து செயற்படும் எண்ணமோ எனக்கு கிடையாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்து சமய விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் சில நடவடிக்கைகள் தொடர்பாகத்தான் அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரிவித்து அமைச்சர் மகேஸ்வரன் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக நேற்று அவர் மேலும் சில விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்.

நேற்று தனது இல்லத்தில் செய்தியாளர்களை அழைத்துப்பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது:-

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் மக்களை மீளக் குடியமர்த்துவதில் அரசு பாராமுகமாக இருந்து வருகின்றது.

ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ போன்ற கட்சிகளுக்கு மாதாந்தம் பெருமளவு நிதியை வழங்கி வருகிறது. தமிழ் மக்களுக்கும் சமாதானத்துக்கும் எதிரான தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற ஈ.பி.டி.பிக்கு மட்டும் மாதாந்தம் 70 லட்சம் ரூபாவை அரசு வழங்குகிறது.

எனவே இந்த விடயங்களில் நான் அரசை எதிர்க்கிறேன் என்பது உண்மைதான். அதற்காக ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுகின்றேன் என்று அர்த்தமல்ல. அப்படி கூறுவதில் எந்த வித உண்மையும் கிடையாது.

அண்மையில் ஜனாதிபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழாவில் நான் கலந்துகொண்டேன் என்பதற்காக அவரது கட்சிக்கு தாவி விட்டேன் என்று நினைப்பது தவறானது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானம் கிடைப்பதற்கு ஜனாதிபதியின் ஆதரவும் முக்கியமானது. எனவே, அவரை ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளிடமிருந்து பிரித்து சமாதானத்துக்கான ஆதரவை அவரிடம் பெறுவதற்கே நான் முயற்சித்து வருகிறேன்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவரையும் வேறு சில எம்.பிக்களையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்ததும் அதற்காகவே. எதிர்க்கட்சித் தலைவரும் அவருடன் இங்கு வந்தவர்களும் ஒரு காலத்திலும் இனவாதப் போக்குடைய கருத்துக்களை வெளியிடாதவர்கள். சமாதானத்துக்கு எதிராகவும் செயற்படாதவர்கள்.

எனவே, அத்தகையோரை அழைத்து வந்து இங்குள்ள நிலைமைகளைக் காண்பித்தேன். இவற்றை எவரும் தவறாக புரிந்து விடக்கூடாது.

இலங்கையில் 52 அமைச்சுக்கள் இருக்கின்றன. அவற்றில் ஒருசில அமைச்சுக்கள் மட்டுமே குடாநாட்டு மக்களுக்கு பயன்படக்கூடிய பணிகளை செய்திருக்கின்றன. ஏனைய அமைச்சுக்கள் இங்கு எதனையும் செய்யவில்லை. இதற்காக பிரதமரிடம் எனது ஆட்சேபத்தை தெரிவித்திருந்தேன்.

இவற்றுக்கெல்லாம் கூட்டமைப்பினர் எந்த எதிர்ப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

குறிகாட்டுவான், காரைநகர், பொன்னலை, மூளாய், மாதகல், மண்டைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களின் கட்டுப்பாட்டை கடற்படையினரிடமிருந்து பொலீஸாருக்கு மாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

அத்துடன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சரத்பொன் சேகாவை மாற்றும் படியும் கேட்டுள்ளேன்.

எமது மக்களிடம் இன்னமும் சகஜ வாழ்வு ஏற்படவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறிக்கொண்டு மக்களின் வாழ்விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் எதிர்வரும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் தமிழ்மக்களை பங்குபற்றாது தடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன்.

இராணுவத்தினர் வசம் உள்ள வீடுகளுக்கு உரிய வாடகை மற்றும் நஷ்ட ஈடுகளை வழங்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரியுள்ளேன்.

அத்துடன் உயர்பாதுகாப்பு வலய விவகாரம் குறித்து உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ நீதிமன்றத்தில் அரசுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்வது பற்றி சட்டத்துறை வல்லுநர்களுடன் ஆராய்ந்து வருகின்றேன்.

எனவே, அரசுக்கு எதிராக சில பல விடயங்களில் குரல் கொடுத்தாலும் கட்சியிலிருந்து வேறு கட்சிகளுக்கு மாறும் எண்ணமோ, சமாதானத்துக்கு எதிராக செயற்படும் நோக்கமோ எனக்கு இம்மியளவும் கிடையாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

- இவ்வாறு அமைச்சர் மகேஸ்வரன் விளக்கமளித்தார். (ஐ-4)

# சமாதான சூழலில் ஏன் தேர்தலை நடத்த முடியாது?

## பிரதேச சபைத் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம்,ஜன.27

நாட்டில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது தேர்தல் நடத்த முடியுமானால் தற்பொழுது யுத்தம் இல்லாத சமாதான சூழ்நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை ஏன் நடத்த முடியாது.?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்.

கடந்த புதன்கிழமை சபையின் மானிப்பாய் அலுவலகத்தில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

சபையின் எதிர்காலம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளை விசேட ஆணையாளர்களின் கீழ் இயக்குவதற்கு அனுமதிப்பதில்லை எனவும் -

சபைகளைக் கலைத்துவிட்டு உரிய காலத்தில் தேர்தல் நடத்துங்கள் அல்லது சபைகளின் ஆயுள் காலத்தை மேலும் ஒரு வருட காலத்துக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுங்கள் என்றும் -

அரசிடம் கோருவது என்று அங்கு தீர்மானிக்கப்பட்டது.

விசேட ஆணையாளரின் கீழ் சபைகள் செயற்பட்டால் மக்களுக்கான சேவைகளை உரிய காலத்தில் மேற்கொள்ள முடியாது எனவும் அங்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

(ஐ-10)

# தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள 'சயன்ஸ் ஹோல்' நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் இந்த விசேட கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது.

கலந்துரையாடலில் பலவிடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களின் இயக்குநர் அல்லது நடத்துநரை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

டெங்குவை வைத்து முஸ்லிம் காங்கிரஸிடமிருந்து நிர்வாகத்தை அபகரிக்க முயற்சி

# புத்தளம் அடித்தளமாகலாம் தேசிய அரசியல் பிரச்சினைக்கு!

## அரசுக்கு அமைச்சர் 'ரவூப் ஹக்கீம் முன்னெச்சரிக்கை

புத்தளம்,ஜன.27

புத்தளத்தில் டெங்கு பரவிவருவதோடு முஸ்லிம் காங்கிரஸின் கையிலுள்ள புத்தளம் நகரசபை நிர்வாகத்தை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களின் முயற்சிகள் முழு வேகம் அடைந்துள்ளன. இந்த நிலையில், புத்தளம் சென்றுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் புத்தளம் நகரசபை, தேசிய அரசியல் பிரச்சினைக்கு அடித்தளமாகலாம் என்று அரசுக்கு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறார். புத்தளம் நகரசபையின் ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களின் நோக்கும் போக்கும் குறித்து ஏற்கனவே அரசுத் தலைமையின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் தலைமை அசமந்தமாக இருந்து வருவது குறித்து அமைச்சர் ஹக்கீம் கண்டனம் தெரிவித்தார்.

டெங்கு நோய் பரவுவதைத் தடுக்க புத்தளம் நகர பிதா சரியான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார். தொடர்ந்து அவர் நகரின் சுகாதார சேவையை புறக்கணித்தால் சுகாதாரப் பிரிவை வேறாக்கி அதனை சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் போவதாக வடமேல் மாகாண முதலமைச்சர் அறிவித்தார்.

டெங்கு ஒழிப்பு முதலான சுகாதார சேவைகளை சீராகச் செய்வதற்கு நகரசபையிடம் பணியாள்களோ வாகன வசதிகளோ இல்லை. அவற்றை வேண்டுமென்றே இல்லாமல் செய்துவிட்டு நகரசபைத் தலைவர் கடமையில் தவறிவிட்டார் என்று அவர் மீது வீண் பழி சுமத்துகிறார்கள். இதன் உள்நோக்கம் நிர்வாகத்தை முஸ்லிம் காங்கிரஸிடமிருந்து கைப்பற்றுவதுதான். அதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இடமளிக்காது என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வாகன வசதிகளுடனும் பணியாள்களுடனும் அமைச்சர் ஹக்கீம் புத்தளம் சென்று குப்பைகளை அகற்றி, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளை ஒழிக்கும் தீவிர பணியை தாமே ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், புத்தளம் நகர சபை நிர்வாகத்தில் இருந்து வந்த குடும்ப ஆதிக்கத்தை தகர்த்து 1997இல் நகர சபைத் தலைவராக பதவி வகித்தவருமான கே.ஏ.பாயிஸ் நிலைமையை எடுத்துக்கூறியதை அடுத்தே ஹக்கீம் புத்தளத்திற்கு விரைந்தார். (ஐ)

# இயக்கம் என்று கூறி கப்பம் கேட்ட இருவர்

## வவுனியா பொலீஸாரால் கைது

வவுனியா.ஜன.27

தங்களை இயக்க உறுப்பினர்கள எனக் கூறிக்கொண்டு விடுதி உரிமையாளர் ஒருவரிடம் கப்பம் கேட்ட இருவரை வவுனியா பொலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் வவுனியா, பசார் வீதியில் உள்ள தனியார் விடுதிக்குச் சென்ற நபர்கள் தாம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி, தமக்கு கப்பம் தரவேண்டும் என்று கோரியுள்ளனர்.

இதுபற்றி விடுதி நிர்வாகம் பொலீஸாருக்கு தகவல் கொடுத்தது. பொலீஸார் உடனடியாக வந்து நபர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்தனர். விசாரணையின்போது மேற்படி நபர்கள் இருவரும் எந்த அமைப்புக்களையோ, இயக்கங்களையோ சார்ந்தவர்கள் அல்லர் என்பது தெரிய வந்தது. இருவரும் மட்டக்களப்பு பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

செல்லத்தம்பி சுதாகரன், செல்லதம்பி ஜெயக்குமார் ஆகிய இரு சகோதரர்களே கைதாகியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-164)

## வாகன விபத்தில் ஒருவர் மரணம்!

கொழும்பு,ஜன.27

அக்கரைப்பற்று பஸ்நிலையம் அருகே நேற்று நடைபெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். வான் ஒன்றும் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதில் இவ்விபத்து நடைபெற்றது. சைக்கிளில் பயணம் செய்தவரே கொல்லப்பட்டிருக்கிறார். விபத்து நடைபெற்ற பொழுது வானின சாரதியில்லாத ஒருவரே வானைச் செலுத்தினார் எனக் கூறப்படுகிறது.



வர்த்தகம் மற்றும் கைத்தொழில் தொடர்பான தகவல் தொழில்நுட்ப மையம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். வணிகர் கழகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இந்த மையத்தின் திறப்பு விழா நிகழ்வில், இலங்கை வணிகர் கழகத்தலைவர் திலக் டீ சொய்ஸாவும் யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரனும் நினைவுப் பரிசிலை பரிமாறிக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம். அருகில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி யூபோ காடினரும் காணப்படுகின்றார். (ஐ-9)

## மகாகும்பாபிஷேகம்

சுழிபுரம்,ஜன.27

தொல்புரம் கிழக்கு துரையன் வளவுப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து நாற்பத்தைந்து தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (எ-28)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.27

தீவக லயன்ஸ் கழகமும் அகதிகள் புனர்வாழ்வு நிறவனமும் இணைந்து தீவுப்பகுதிப் பாடசாலை மாணவர்களுக்காக நடத்திய கணனி ஆரம்பப் பயிற்சிநெறியில் பயின்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தீவக லயன்ஸ்கழகத் தலைவர் ப.தேவநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதி பிரதம விருந்தினராகவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் அ.நல்லதம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம)

### பூஜை வழிபாடுகள் இன்றி இருக்கும்

# கொழும்புத்துறை ஆலயத்தில் பல பொருள்கள் அபகரிப்பு

அரியாலை,ஜன.27

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் ஆலயத்தில் உள்ள பல பொருள்கள் களவாடப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

கண்டாமணி, பஞ்சமணி மற்றும் ஆலய மண்டபத்தின் ஓடுகள், மரங்கள் உட்பட ஆலயத்தின் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. இதனால் ஆலயத்துக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த ஆலயம் பூஜை வழிபாடுகள் இன்றி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)



யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் யாழ்.நகர் றோட்டறக்ட் கழகத்தினர் இரத்த தானம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (எ-9)

# இஸ்ரேலிய ராணுவத் தாக்குதலில் 12 பலஸ்தீனர் பலி; 50 பேர் காயம்!

லண்டன்,ஜன.27

காஸா நகரில் இஸ்ரேலிய ராணுவம் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட பாரிய தாக்குதல் நடவடிக்கையில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பலஸ்தீனர்களின் இப்போதைய எழுச்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளில் இடம்பெற்ற மிகப்பாரிய இஸ்ரேலிய ராணுவ நடவடிக்கை இது எனக்கூறப்படுகிறது.

வான் தாக்குதலின் உதவியுடன் சுமார் 50 டாங்கிகள் சகிதம் காஸா நகரில் மூன்று முனைகளில் இருந்து இஸ்ரேலிய ராணுவம் உட்புகுந்தது.

அங்கு இஸ்ரேலிய ராணுவம் 3 உலோகத் தொழிற்சாலைகள் ஒரு மசூதி உட்பட பல கட்டடங்களை தகர்த்தது.

இத்தாக்குதல்களில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இவர்கள் ஏறக்குறைய 20 வயதுடையவர்கள் ஆவர். அத்துடன் மேலும் 50 பேர் இதில் காயமடைந்தனர்.

இஸ்ரேலிய ராணுவம் கடந்த 3 நாள்களாகவே காஸாவில் தாக்குதல்களை நடத்திவருகிறது.

பலஸ்தீனர்கள் ஆயுதங்களை தயாரிக்கவும் ரொக்கெட்டுகளை ஏவவும் பயன்படுத்திய இடங்களையே தாம் தாக்கியதாகவும் - பலஸ்தீனத் தீவிராவாதிகள் திருப்பித் தாக்கிய போது 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் -

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஷால் மொபஸ் அரச வானொலியில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

இதேவேளை, பலஸ்தீன அதிகாரி சயீப் எரகட் கருத்து வெளியிடுகையில், நாளை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தானும் தனது லிகுட் கட்சியும் வெ... பெற இந்த ராணுவ தாக்குதல் மூலம் வழிதேடுவதாகக் குற்றஞ்சாட்டினார்.

காஸா நகரில் ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் கோட்டை என கருதப்படும் பலஸ்தீன மத்திய சதுக்கத்தில் உக்கிரமான சண்டை இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. (ஒ)



இஸ்ரேலியத் தாக்குதலில் உயிரிழந்த பலஸ்தீன இளைஞர் ஒருவரின் தாயார் கதறி அழுவதைப் படத்தில் காணலாம்.

# கென்ய விமான விபத்தில் அந்நாட்டு அமைச்சர் பலி!

நைறோபி,ஜன.27

கென்ஜாவில் இடம்பெற்ற ஒரு விமான விபத்தில் அந்நாட்டின் தொழில் அமைச்சர் உயிரிழந்தார்.

புதிதாக தெரிவுசெய்யப்பட்ட அமைச்சர்களை ஏற்றிச் சென்ற இலகு ரக விமானம் ஒன்று கென்யாவின் மேற்குப்பகுதியில் தரையிறங்கச் சிறிது நேரத்துக்கு முன்பாக மின்சார கேபிள் இணைப்புக்களில் சிக்கி வீழ்ந்து நொறுங்கியிருக்கிறது.

அமைச்சருடன் இரு விமானிகளும் பலியாகினர். வேறு மூன்று அமைச்சர்களும், பயணிகள் சிலரும் காயமடைந்திருக்கின்றனர்.

தேர்தல் பிரசாரத்தின்போது கார் விபத்து ஒன்றில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் கென்ய அதிபர் முவேய் கியாகி இந்த விமான விபத்துக்குறித்து அதிர்ச்சி வெளியிட்டிருக்கிறார். (ஐ)



நைரோபி ஆஸ்பத்திரிக்கு வெளியே கலங்கியவாறு நிற்கும் உறவினர்கள்.

# கொலம்பியாவில் செய்தியாளர்கள் கடத்தப்பட்டனர்

பொகோடா,ஜன.27

கொலம்பிய நாட்டில் அமெரிக்க புகைப்படக்காரர் ஸ்காட் டால்டன், பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ருத் மோரிஸ் ஆகியோரைப் போராளிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

'லொஸ்ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்' பத்திரிகைக்காக செய்தி சேகரிக்க அவர்கள் பணிக்கப்பட்டிருந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை சரவேனா நகரில் காரில் சென்ற அவர்களைப் போராளிகள் தடுத்துநிறுத்தி அழைத்துச் சென்றனர்.

தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அனுமதி இன்றி நுழைந்ததற்காக அவர்களைப் பிடித்துச் சென்றதாக போராளிகள் கூறினர். பத்திரிகையாளர்கள் இருவரையும் தங்கள் தலைவரிடம் அழைத்துச்செல்வதாகவும் -

பின்னர் அவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் -

போராளிகள் மேலும் கூறினர்.

தென் அமெரிக்காவின் வடமேற்கில் அமைந்துள்ள கொலம்பியாவில் நீண்டகாலமாக போராளிகளுக்கும் அரசபடையினருக்கும் மோதல் நடந்து வருகின்றமை தெரிந்ததே. (ஒ)

# அமெரிக்க வேவு விமானம் தென்கொரியாவில் வீழ்ந்தது!

சியோல்,ஜன.27

அமெரிக்க வேவு விமானம் ஒன்று தென்கொரியத் தலைநகர் சியோலில் வீழ்ந்து நொறுங்கியது. விமானம் வீழ்வதுக்கு முன்பதாக விமானி 'பரசூட்' மூலம் குதித்து உயிர் தப்பினார். அவருக்கு காயங்கள் ஏற்பட்டதை அடுத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே சமயம் விமானம் தரையில் வீழ்ந்ததில் மூவர் பலத்த காயமடைந்தனர்.

சியோலில் ஒசன் என்ற இடத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானம் விபத்துக்கு உள்ளானது. தரையில் இருந்த வீடு மற்றும் அதனுடன் இணைந்த கார் திருத்தும் இடம் ஆகியவற்றின் மீதே விமானம் வீழ்ந்து நொறுங்கியது.

இந்த விபத்துக்கு இயந்திரக் கோளாறே காரணம் என நம்பப்படுகிறது. அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

வடகொரியாவால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களில் இருந்து தென் கொரியாவை பாதுகாப்பதற்காக சுமார் 37ஆயிரம் அமெரிக்கப்படையினர் அங்கு நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குற்றவாளிகளை ஒப்படைக்க இந்தியா, பிரான்ஸ் உடன்பாடு

பாரிஸ்,ஜன.27

தேடப்படும் குற்றவாளிகளை ஒப்படைக்க வகைசெய்யும் உடன்பாட்டில் இந்தியாவும் பிரான்ஸும் கடந்த வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டன.

அவ்வாறு ஒப்படைக்கப்படும் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை விதிகக்கூடாது என்ற பிரான்ஸின் உணர்வை மீறி இந்தியா செயற்படாது என்று இந்தியத் தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டில் இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி, பிரான்ஸ் நீதித்துறை அமைச்சர் தொமினிக் பெர்பன் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிக்க இந்த உடன்பாடு பெரிதும் உதவும் என்று இரு தலைவர்களும் குறிப்பிட்டனர்.

தேடப்படும் குற்றவாளிகளை ஒப்படைக்கும்போது அவர்கள்மீதான குற்றங்கள் உறுதியானாலும், அவர்களுக்கு இந்தியா மரணதண்டனை அளிக்காது என்று பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அத்வானி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:- பயங்கரவாதிகள், குற்றவாளிகள் சட்டபூர்வமான நடவடிக்கைகளிலிருந்து தப்பிச்செல்வதைத் தடுக்க இந்த உடன்பாடு வகை செய்யும். இதேபோன்ற ஒப்பந்தம் பிரிட்டன், ஸ்பெயின் ஆகிய நாடுகளுடன் இந்தியா ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளுக்குக் கிடைக்கும் நிதி உதவியைத் தடுக்கும் முயற்சியாக பல்வேறு நாடுகளை ஒன்று திரட்டிவருகிறது பிரான்ஸ். இந்த முயற்சி இந்தியாவுக்குப் பெரிதும் உதவும் என்றார்.

தேடப்படும் குற்றவாளி பிரான்ஸில் குற்றம் இழைத்திருந்தால் அதன்படி உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான தண்டனை நிறைவேற்றப்பட்ட பிறகு, அவர் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படுவார் என்றார் பிரான்ஸ் அமைச்சர் பெர்பன். (ஒ)



1949ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் முதல் தடவையாக சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையேயான பயணிகள் விமான சேவை நேற்று முதல் ஆரம்பமானது சீனாவின் வர்த்தக தலைநகரான ஷங்காயின் புடொங் சர்வதே விமான நிலையத்தில் சீன விமானசேவை நிறுவனத்தின் விமானத்தில் தாய்வான் செல்வதற்காக பயணிகள் ஏறிக்கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

சீனாவில் உள்ள தாய்வானியர்கள் 'லூனர்' புதுவருட விடுமுறைக்கு தாய்நாடு செல்வதில் ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கது.






ஐ.நா.ஆயுதக் கண்காணிப்பாளரிடம்

# ஈராக்கின் ஒத்துழைப்புக் குறித்து அறிக்கை கோருகிறது அமெரிக்கா!

ஆயுத சோதனைக்கு ஈராக் முழு ஒத்துழைப்பு அளிக்கிறதா என்பது குறித்து மட்டும் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை அனுப்புமாறு ஐ.நா. தலைமை ஆயுத சோதனையாளர் ஹன்ஸ் பிளிக்ஸை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் சமர்ப்பிப்பதற்காக அறிக்கை தயாரித்துவரும் பிளிக்ஸிடம் அமெரிக்கா இவ்வாறு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து, ஆயுத சோதனைக்கு ஈராக் முழு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்பது போன்ற அறிக்கையைப் பிளிக்ஸ் தாக்கல் செய்யலாம் என்று தெரிகிறது. இதன்மூலம் ஈராக் மீது போர் தொடுக்கவேண்டும் என்று புஷ் நிர்வாகம் வலியுறுத்தக்கூடும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஆயுத சோதனைக்கு ஈராக் முழு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று அறிக்கை தரப்பட்டால் ஈராக்குக்கு எதிராகப் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்படலாம் எனத் தெரிகிறது. எனினும், இராணுவ நடவடிக்கை தேவையில்லை என்று தீர்மானம் வலியுறுத்தக்கூடும்.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் இருப்பிடங்களைக் கண்டறிய அமெரிக்க வேவு விமானங்கள் பறப்பதற்கு ஈராக் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. மேலும் ஆயுத சோதனையாளர்களுக்குத் தனிப்பட்ட முறையில் விஞ்ஞானிகள் பேட்டியளிக்கவும் ஈராக் தடைவிதித்துள்ளது. இதற்கு பிளிக்ஸ் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார். ஈராக் நடவடிக்கைகள் அதிருப்தி அளிப்பதாக பிளிக்ஸ் அறிக்கை சமர்ப்பித்தால் அதுவே இராணுவ நடவடிக்கை எடுக்கப்போதுமானது என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கருதுகின்றன.

ஆனால், பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகள் இராணுவ நடவடிக்கை இப்போதைக்குத் தேவையில்லை என்கின்றன. ஈராக்கில் சோதனை நடத்த ஆயுத சோதனையாளர்களுக்கு இன்னும் கால அவகாசம் தரப்படவேண்டும் என்றும் அவை கருதுகின்றன. (ஒ)



ஈராக்கியத் தலைநகர் பக்தாத்திலுள்ள அல்கெய்டா மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கியர்கள் தமது நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகள் விலகிவிட வேண்டித் தொழுகை நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஆங்கில சுருக்கெழுத்தாளர்)*

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 23.01.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சிவகாமி தம்பதிகளின் அருமைப் புதல்வனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் சிவசோதி (கனடா), சித்திரசேனன் (கனடா), காலஞ்சென்ற தயாமதி, வளர்மதி (கனடா), பரமேஸ்வரன் (ஜேர்மனி), சிவபாலன் (ஆசிரியர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்), பகீரதன் (INFOSAT (PVT.) LTD.) ஆகியோரது அருமைத் தந்தையும் கோணலிங்கம், யோகராணி, ஜெயகாந்தன், றெஜினா, மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும் சபேசன், கிரிஜா, பிரசாந்தன், றக்‌ஷனா, லட்சியா, சரண்யா, விதுர்ஷன், மதுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பிற்பகல் 4.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (27.01.2003) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

54, FRAZER AVENUE,
DEHIWELA.
T.P.No: 714374 (சி-26228)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கற்றல் உபகரணம் அன்பளிப்பு

செம்பியன்பற்று,ஜன.27

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர் சபையினர் வடமராட்சியிலுள்ள 10 பாடசாலைகளைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை, ஆலய கணணன் இல்லத்தில் வைத்து வழங்கியுள்ளனர்.

இதுவரை காலமும் வடமராட்சி கல்வி வலயத்தினூடாகவே மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுவந்தன. (எ-36)

# கணித பாட செயலமர்வு

மண்டைதீவு,ஜன.27

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கணித பாட ஆசிரியர்களுக்கான தர வட்டச் செயலமர்வு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் சகல கணித பாட ஆசிரியர்களையும் பங்கேற்கச் செய்யுமாறு தீவக பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-88)

# புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

ஊர்காவற்துறை,ஜன.27

தீவுப்பகுதியில் பல்வேறு இடங்களிலும் தற்பொழுது புகையிலை பயிர்ச்செய்கையில் விவசாயிகள் பெரிதும் ஆர்வத்துடன் ஈடுபட்டுவருகின்றனர்.

தற்சமயம் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருவதையடுத்து அந்நிலங்களில் விவசாயிகள் புகையிலைப் பயிர்களை நடுகை செய்து வருகின்றனர்.

எனினும், கடந்த வருடத்தில் தீவுப் பகுதியில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் புகையிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதனால் புகையிலையின் விலை வீழ்ச்சியடைந்திருந்தமை தெரிந்ததே. (எ-16)


## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க

அங்கத்தவர்களுக்கும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கும்

எரிபொருள் நிரப்பு நிலைய

### திறப்புவிழா அழைப்பு

வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் நாளை (28.01.2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் 12.00 மணிக்குள் வரும் சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஆகவே, இந்தத் திறப்புவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். பொதுமுகாமையாளர்.

(13747) வேலணை ப.நோ.கூ. சங்கம், வேலணை.



## artlink2002 THE INTERNATIONAL ART WORKSHOP IN SRI LANKA



### நவீன புகைப்படக் கண்காட்சி

15 - 20 ஐப்பசி 2002
Barefoot Gallery, கொழும்பு.

08 - 15 கார்த்திகை 2002
Alliance Francaise, கண்டி.

20 - 23 மார்கழி 2002
Fort, காலி.

28 - 31 தை 2003
நாவலர் மண்டபம் (நாவலர் வீதி),
யாழ்ப்பாணம்.

கண்காட்சி நேரம்:
மு.ப. 10.00 - பி.ப. 6.00

(13698)





ஜெய் குருதேவ்

The Art of Living

யாழ்ப்பாணத்தில்

## வாழும் கலை பயிற்சி

### சுதர்சன கிரியா யோகா

### ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

28.01.2003 முதல் 02.02.2003 வரை

நேரம்: மாலை 6 மணிமுதல் 8.30 மணிவரை

இடம்: திவ்ய ஜீவன சங்க மண்டபம்
கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம்.

### இலவச அறிமுக உரை

இன்று (27.01.2003) திங்கள் மாலை 6.00 மணிக்கு

இடம்: திவ்ய ஜீவன சங்க மண்டபம்
கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம்.

பயன்கள்:
- ஆன்மீக முன்னேற்றம்
- மன உளைச்சல் (Stress), மன இறுக்கம் (Tension) மாற்றம்.
- தனி மனித மேம்பாடு
- நோய்களில் இருந்து விடுதலை.

ஜாதி மத வேறுபாடின்றி யாவரும் பங்குபெறலாம்.

தொடர்பு: 0777-495405

(சி-26243)



## Araliya International

நிறுவனத்திடமிருந்து மேலும் ஒரு அறிமுகம்

அரலிய இருக்கை



இலங்கையில் முதன் முறையாக

மூல உருவமைப்புடன் கட்டுப்படியான விலையில்
குஷன்களுடன் புத்தம் புதிய இருக்கைகள்

### இருக்கைகளில் ஒரு புரட்சி!

தரமான உற்பத்திகள் - மிகப்பிந்திய தொழில்நுட்பம்

- வாகனங்களுக்கான இருக்கைகளும், கவர்களும்.
- பேருந்து இருக்கைகள்
- மோட்டார் சைக்கிள் இருக்கைகள்.
- முச்சக்கரவண்டி இருக்கைகள்.

வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்

ARALIYA INTERNATIONAL

No. 76, Industrial Estate Katuwana Road, Homagama.

தொலைபேசி. 894848, 074 408630 / 442634.
தொலைநகல். 074 408631


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் பாலசிங்கம் மாணிக்கசிங்கம்

*தோற்றம்: 07.07.1935 மறைவு: 27.12.2002*

எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபர்
திருமதி பு.மாணிக்கசிங்கம் அவர்களின் கணவர்
பாலசிங்கம் மாணிக்கசிங்கம்
அவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.

(13749)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 - 02 - 1932



உதிர்வு 08 - 02 - 2002

### அமரர் கிருஷ்ணபிள்ளை இராமசாமி

திதி: 27.01.2003

எங்கள் குடும்பத் தலைவராய் அன்பின் திருவுருவாய்
வாழ்ந்து, எங்களுக்கு நல்வாழ்வளித்த வழிகாட்டியே!
எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து
எங்கள் நினைவுடனேயே இயற்கை எய்திய நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு போயிடினும்
உங்கள் திருவுருவமும் பாச நினைவலைகளும்
என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிற்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
இ.கிருஷ்ணசாமி (கிட்டு)
*விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு, அல்வாய்.*

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(13746)

உதயன்

## உறுதிகளை நிறைவேற்றும் பெருமைமிகு ஜனாதிபதி

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் ஜப்பானில் நடைபெறவிருக்கின்றது.

கடந்த நவம்பர் இறுதியில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற உதவும் நாடுகளின் கூட்டத்தைத் தொடர்ந்து அடுத்த கூட்டம் ஜப்பானில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அமைதி முயற்சிகளுக்கு வலுவூட்டும் வகையில் "சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரும் சர்வதேச மாநாடாக" ஒஸ்லோ கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டது.

ஜப்பானில் நடைபெறப்போகும் கூட்டமே, தற்போதைய சமாதான முயற்சிகளை மேம்படுத்தும் விதத்தில் அது தொடர்பான விடயங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் மாநாடாக அமையப்போகின்றது.

இதுவரை காலமும் சமாதானப் பேச்சுகளின்போது இனங்காணப்பட்ட அவசர மனிதாபிமானப் பணிகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான நிதி உதவியைப் பெற்றுத் தரப்போகும் கூட்டம் அதுதான்.

சுருக்கமாகக் கூறுவதானால் -

கடந்த இரண்டு தசாப்த கால கொடூரப் போரினால் அழிந்துபோயிருக்கும் வடக்கு - கிழக்கை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கான ஆயத்தங்கள் குறித்தே இதுவரை பேசப்பட்டுள்ளது. - அந்த ஆயத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி ஜப்பான் கூட்டத்திலேயே கிடைக்கப்போகின்றது. அதாவது, அழிந்துபோய் கிடக்கும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மக்கள் மீள மூச்சு விடுவதற்கான கால்கோள் ஜப்பான் மாநாட்டில் இடப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

"வெண்ணெய் திரண்டுவரும் சமயத்தில் தாழியை உடைப்பதுபோல" போரினால் நசுக்கப்பட்ட தமிழினத்துக்கு சற்று மூச்சுவிட கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தைத் தட்டிப்பறித்து, அவர்களின் கழுத்தை மீண்டும் கொடூரமாக நசுக்கத் தயாராகிவருகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் ரணிலின் அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திவரும் பேச்சுகள் காரணமாக நாட்டின் பாதுகாப்பு பேராபத்துக்கு உள்ளாகியிருக்கின்றது என்று அறிவித்து பிரதமரின் அரசைக் கலைக்க ஜனாதிபதி தயாராகிவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்குத் தமிழருக்கு மீண்டும் வாழ்வளிக்க வகைசெய்யும் ஜப்பான் மாநாட்டில் பிரதமர் ரணிலின் அரசுப் பிரதிநிதிகளும் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வதைத் தடுக்கும் விதத்தில் அந்த மாநாட்டுக்கு முன்னர் மார்ச்சில் நாடாளுமன்றைக் கலைக்கவும், மே மாதத்தில் தேர்தலை நடத்தவும் ஜனாதிபதி குமாரதுங்க தயாராகிவிட்டார் என்பது உள்வீட்டுத் தகவல்.

"ஐ.தே.கட்சி அரசு தொடர்பாக ஜனாதிபதி ஏமாற்றம் அடைந்துள்ளார். எந்தநேரத்திலும் நாடாளுமன்றத்தை அவர் கலைத்துவிடலாம். தன்னுடைய (ஜனாதிபதியுடைய) பதவிக்காலம் முடியும் வரை நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அவர் காத்திருக்கமாட்டார்" - என்று ஜனாதிபதி தலைவியாக இருக்கின்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரட்ண கூறியிருக்கின்றார்.

"தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை வைத்திருக்கும் வரை - சிதன் பதவிக்காலம் முடியமுன்னர் - அதைக் கலைக்கமாட்டேன்" என்று நாடாளுமன்றத்துக்கு தானாகவே எழுத்துமூலம் உறுதிமொழி அளித்தவர் ஜனாதிபதி குமாரதுங்க.

தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் 'பெயர்போன' ஜனாதிபதி குமாரதுங்க 'வழமைபோல' இந்த வாக்குறுதி விடயத்திலும் நடந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறுகிய - தனிப்பட்ட - அரசியல் லாபங்களுக்காக ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கையால் தற்போதைய சமாதான முயற்சிகள் அடிபட்டுப் போகும் என்பது நிச்சயம்.

அப்படி நடந்தால் மீளமுடியாத பல விளைவுகளை எதிர்கொள்ளும் நிலைக்கு நாடு தள்ளப்படும்.

நாட்டை, அதன் இன்றைய சீரழிவு நிலைக்குத் தள்ளிய தலைவர்களின் பெருமையில் கணிசமான பங்கு பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு உள்ளது. அந்தத் தலைமுறைச் செயற்பாட்டை ஜனாதிபதி குமாரதுங்கவும் சிரமேற்கொண்டு தொடர்ந்து குடும்பப் பெருமையை உயர்த்திக்கொள்கிறார் என்றுதான் அர்த்தம்...

**வடக்கு - கிழக்கு பிரதேசத்தில்**

# 300 குடும்ப நல மாதுகளை நியமிக்க அமைச்சு நடவடிக்கை

### மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

வலி.வடக்கு,ஜன.27

வடக்கு - கிழக்கில் நிலவும் குடும்ப நல மாதுகளுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக வெகுவிரைவில் 300 பேரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கு வேண்டிய முன்முயற்சி செயற்பாடுகளை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிமனை திறப்புவிழா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய குமாரவேலுப்பிள்ளை மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நிக்கொட் அமைப்புகளுடன் இணைந்து வடக்கு - கிழக்கில் மலேரியா நோயை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்களில் சுகாதார மருத்துவ சேவைகளில் உள்ளவர்களை இங்கு இடமாற்றம் செய்யவேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வைத்திய சேவையைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணத்தில் போருக்கு முன்பிருந்த நிலைமை எதிர்காலத்தில் ஏற்படவேண்டும்.

இங்கு படித்து, பயிற்சிபெற்ற வைத்தியர்கள், தாதிமார்கள் இங்கேயே கடமையாற்ற முன்வருவதன்மூலம் இங்கு மருத்துவ சேவையை சீர்படுத்தமுடியும்.

ஆகவே, எமது மண்ணில் கற்று மருத்துவராகவோ, தாதியராகவோ வெளியேறுபவர்கள் எமது மண்ணில் எமது மகளுக்காகப் பணியாற்றுவதைத் தமது கடமையாகக் கருதவேண்டும்.

எமது மக்களுக்கு உதவுவதே பெருமையைத் தேடித்தரும் என்பதனை அனைவரும் உணரவேண்டும் - என்றார் அவர்.

(ஒ-12-86)

# இனவாதத்துக்கு எதிரான சக்திகளை இணைத்து பேரியக்கம் அமைக்க முயற்சி

### ஐக்கிய சோஷலிசக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.27

பேரினவாதத்துக்கு எதிரான மூவின சக்திகளையும் ஒன்றிணைத்து பேரியக்கம் ஒன்றை தென்னிலங்கையில் அமைக்கும் முயற்சியை ஐக்கிய சோஷலிசக்கட்சி ஆரம்பித்திருக்கின்றது.

இது தொடர்பாக கட்சியின் யாழ்.மாவட்டச் செயலாளர் க.தேவராசன் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒருவருடம் பூர்த்தியாக இன்னும் ஓரிரு வாரங்களே உள்ளபோதிலும் மேற்படி ஒப்பந்தம் இன்னும் அரசினால் பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. மாறாகப் பொருத்தமற்ற பொய்க் காரணங்களைக் கூறி பொறுப்பற்ற முறையில் அரசு பின்வாங்கிச் செல்கிறது.

வேறு வழியின்றி வடக்கு - கிழக்கின் தமிழ் மக்கள் தமது வாழ்வுரிமையை வலியுறுத்தி அஹிம்சை வழிப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் இதேவேளை - தென்னிலங்கையில் சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பியக்கமும் பலமான பின்னணியுடன் மேலோங்கிவருகிறது.

இந்தப் பேரினவாதத்தைத் தோற்கடிப்பதையும் இனங்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுதந்திரத்தை வென்றெடுப்பதையும் நோக்காகக்கொண்டு இயங்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையக சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து மக்கள் பேரியக்கமாக எழுச்சிகொள்வதன் மூலம் மட்டும் இங்கு யுத்தம் மீண்டும் மூளாமல் தடுக்கமுடியும்.

இதனை நோக்கமாகக் கொண்டே தென்னிலங்கையில் சகல மாவட்டங்களிலும் பேரியக்கத்தை கட்டி எழுப்ப எமது கட்சி நடவடிக்கையை மேற்கொள்கிறது. - என்றுள்ளது.

(ஒ-4)

# கூட்டணி உறுப்பினர்கள் பிணைக்கைதிகள் அல்லர்!

### கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி கூறுகிறார்

கொழும்பு,ஜன.27

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் எவருடைய பிணைக் கைதிகளும் அல்லர். அதுமட்டுமின்றி எமது கட்சி, கொள்கையிலிருந்து என்றும் விலகியதுமில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள், புலிகளின் பிணைக்கைதிகளாகச் செயற்படுவதாகக் கூறி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர விடுத்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் விடுத்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிணைக் கைதிகளாகஅன்றி கட்சியின் இலட்சியத்தையும் மையமாகக் கொண்டு நாம் தொடர்ந்தும் செயற்பட்டுவருகின்றோம்.

குறுகிய அரசியல் இலாபம் கொண்டு செயற்படும் எண்ணம் எமக்குக் கிடையாது. கடந்த முப்பது வருட காலமாக தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்களுக்கு ஆற்றிய சேவை மகத்தானது.

எந்த நோக்கத்திற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டதோ அதிலிருந்து சிறிதும் விலகாது நாம் செயற்பட்டு வருகின்றோம்.

2001ஆம் ஆண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட சமயம் அதில் எமது கட்சி கையொப்பமிடவில்லை. அவ்வேளை கூட எம்மீது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிணைக் கைதிகளாகச் செயற்படுகிறோம் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

பல வலுவான காரணங்களுக்காகவே நாம் ஐக்கிய தேசிய முன்னணி அரசினை ஆதரித்து நிற்கிறோம். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கியமை, பாரியளவில் இராணுவத்தினரின் சோதனை நிலையங்களை அகற்றியமை, கொழும்பிற்குச் செல்லும் பயணிகள் விவரம் பெறும்முறை நீக்கப்பட்டமை, தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்கள் என்பவையே நாம் ஐ.தே.முன்னணி அரசினை ஆதரிப்பதற்கு காரணங்களாகும்.

ஜே.வி.பி.கட்சியையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒப்பிடுவது பாரிய தவறு.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுவருவதால் எத்தனையோ உயிர்கள் அழிக்கப்படுவதும் சொத்துச் சேதங்களும் தடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல கோடி ரூபாவை நாட்டின் அபிவிருத்திக்காக வழங்குவதற்கும் வெளிநாடுகள் பல முன்வந்துள்ளன.

எனவே, மக்கள் சுதந்திரமாக - சந்தோசமாக வாழ்வதற்குரிய ஒரு சூழல் உருவாகிவரும் இவ்வேளையில் அனைவரும் இணைந்து நல்லதொரு சமாதானத்திற்காக பாடுபடுதல் வேண்டும் - அதனைவிடுத்து குழப்பும் முயற்சிகளில் ஈடுபடுவது வேதனைக்குரிய ஒன்றாகும் -

எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

# பளையில் நிரந்தர மருத்துவர் இல்லை: வெளிநோயாளர் பிரிவு மூடப்படும் அபாயம்!

தென்மராட்சி,ஜன.27

பளை ஆஸ்பத்திரிக்கு நிரந்தர டாக்டர் இன்மையால் தற்போது இயங்கிவரும் வெளிநோயாளர் பிரிவையும் அடுத்த வாரமளவில் மூடவேண்டிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது இயங்கும் வெளிநோயாளர் பிரிவுக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஒருவரே வாரத்தில் மூன்று தினங்கள் பிற்பகலில் இங்கு நோயாளர்களை கவனித்து வருகிறார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி டாக்டர்களில் ஒருவருக்கு பளை ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது, எனினும் அவரது இடத்துக்கு பதில் கடமையாக டாக்டர் எவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு நியமனம் செய்யப்படவில்லை. இதனால் குறித்த டாக்டர் பளைக்குச் செல்லமுடியாத நிலைஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் மீண்டும் வார்ட்டுக்கள் திறக்கப்பட்டு சிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு கடமைபுரியும் டாக்டரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் - கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-117)

**நாளை**

தை 14
செவ்வாய்க்கிழமை
(28.01.2003)
திதி : ஏகாதசி
முன்னிரவு 8.19 வரை.
நட்சத்திரம் : கேட்டை.
பின் இரவு 2.46 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 11.06 - 12.36
ராகுகாலம் : 3.36 - 5.06
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

கணவனின் அன்பும் மனைவியின் பொறுமையும் மனைக்கு அமைதி கூட்டுகின்றன.

**சமுர்த்தி செயற்றிட்டத்தின் கீழ்**

# 14 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

சமுர்த்தி செயற்றிட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் மொத்தமாக 25 லட்சம் ரூபா நிதி பங்கீட்டடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, நெடுந்தீவு முதலான பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் -

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா ஒரு லட்சத்து 85ஆயிரம் ரூபாவும் - பிரித்தளிக்கப்படவுள்ளது.

இந்த ஒதுக்கீட்டிலிருந்து மாவட்ட சமுர்த்தி அலுவலக நிர்வாக செலவினமாக ஒரு வீதமும் ஒவ்வொரு பிரதேச செயலக சமுர்த்தி திட்ட நடைமுறை நிர்வாகச் செலவினமாக 5 வீதமும் சகல சமுர்த்தித் திட்டங்களிலும் மக்கள் பங்களிப்பாக 25 வீதமும் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்தத் திட்டத்திற்குரிய முன்மொழிவுகளை இம்மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-12-76)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி மகாவித்தியாலயம்.
யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்
ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியரும்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின்
இன்றைய ஆசிரியருமான

**திரு. வல்லிபுரம் நடராசா**
(B.A.Hons., Dip.In.Edu.,M.Ed.,SLPS 2I)

அவர்கள் கல்வி முதுமாணி பட்டத்தையும் இலங்கை அதிபர் சேவை தரம் 2 Iஐயும் பெற்றமைக்காக எமது கல்விச் சமூகம் அவரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்றுச் சிறந்த சேவைபுரிய வேண்டுமென அருகிலிருக்கும் திருமுருகனை வேண்டுகின்றோம்.

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. (13713) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி ஜெயரஞ்சினி ஜெயரட்ண அவர்களின் அருமைத் தந்தையார்

**வல்லிபுரம் செல்லையா** *(மீசாலை)*

அவர்கள் இயற்கையெய்தி ஒரு திங்கள் நிறைவில் அவரை நினைவு கூர்வதுடன் அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
(13714) யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 - 10 - 1917



இறப்பு 07 - 02 - 2002

**திருமதி நாகரத்தினம் நடராசா**
(கொட்டடி)
திதி: 27.01.2003

*ஓராண்டு சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்*
*மறக்க முடியவில்லை உங்கள் உருவம்*
*நீங்கள் மிதித்த இடத்துப் புல்கூட இறப்பதில்லை ஒருபோதும்.*
*இன்று நாம் தவிக்கின்றோம் உங்கள் பிரிவால்.*

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை,*
*மானிப்பாய்.* (13712)

துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 09 - 1933



உதிர்வு 06 - 02 - 2002

**திருமதி சின்னத்தம்பி பரமேஸ்வரி**
திதி. 27.01.2003 தசமி

அன்பு என்னும் நீர் ஊற்றி
அரவணைத்த எம் தாயே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாதம்மா உங்கள் பிரிவு
இங்கிருந்து நாமெல்லாம் வேண்டுகின்றோம்.
*உம் ஆத்ம சாந்திக்காய்!*

(13669)

நிரந்தர முகவரி: *மடத்தடி, தெல்லிப்பழை.*
தற்காலிக முகவரி: *காளி கோயிலடி, சங்கானை.*

தங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பிரதேசத்தில் உள்ள அரச, உள்ளூராட்சி, திணைக்களத் தலைவர்களையும், அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (எ-117)

## கிராம அலுவலருக்கு பதவி உயர்வு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 25 கிராம அலுவலர்கள் வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பதவியுயர்வு வழங்கப்பட்டதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் சேவையில் பதினைந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த கிராம அலுவலர்களுக்கே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## தேவை

*கொடிகாமத்தில் இயங்கும் வில்லிசைக் குழுவிற்கு நகைச்சுவையாளர் ஒருவர் தேவை.*
*தொடர்பு:* **AVM கலையகம்**
புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்.

## தொழிலாளர் தேவை

1) மேசன் (Masons)
2) தச்சுத் தொழிலாளர் (Carpenters)

தகுதியானவர்கள் உடன் நேரில் வரவும்.

**யூரோவில்**
*866, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 - 02 - 1933



மறைவு 28 - 12 - 2002

**திருமதி V.S.கணபதிப்பிள்ளை பத்மாவதி**
(பவளம்)

*நினைவு தினம்: 27.01.2003 திங்கட்கிழமை*

*அன்னைக்குத் தலைமகளாய்*
*பாசத் தந்தைக்குப் பவளமாய் வந்துதித்தாய்!*
*கணவருக்குக் கடமையுணர் அன்பு மனைவியாய்*
*அன்புக் குழந்தைகளுக்குப் பாசமுள்ள அன்னையாய்*
*தம்பி, தங்கையர்களுக்கு அரவணைக்கும் அக்காவாய்*
*மருமக்கள் – பேரப்பிள்ளைகளைப் பாசத்துடன் நேசித்தும்*
*அன்புடன் உற்றார், உறவினரையும் உபசரித்தாய்*
*ஆனால் இன்று எங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டாய்!*

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுவதோடு இறுதிக்கிரியைகளில் கலந்தும் தந்திமூலமும் தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அத்துடன் இன்று (27.01.2003) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம்! சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்.*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(13492)


## 15ஆவது ஆண்டு நிறைவையொட்டி

மாபெரும் மலிவு விற்பனை

**காவேரி சில்க்ஸின்**

மாபெரும் மலிவு விற்பனை
தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

பாதிக்குப் பாதி விலைக்கழிவில்!
எங்கும் வாங்கமுடியாத விலையில்!

★ சாறி வகைகள் ★ பிறிண்டட் மெற்றீரியல்
★ செக் மெற்றீரியல் ★ பிறிண்டட் சீத்தை
★ BOX சேர்ட் ★ சேட்டிங் சூட்டிங்

மற்றும் அனைத்து ஜவுளி வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**காவேரி**
**மலிவு விற்பனை அகம்**
77, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

# நம்பிக்கை நிதியத்தில் இருந்து பணம் மீளப்பெற படிவம் இல்லை

## விண்ணப்பித்தோர் விசனம் தெரிவிப்பு

ஊர்காவற்றுறை,ஜன.27

ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து பணத்தை மீளப்பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணத்தில் பெறமுடியாதுள்ளதால், இங்கிருந்து பலர் இதற்கு விண்ணப்பிக்கமுடியாதநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.தொழில் திணைக்களத்தினர் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து பணத்தை மீளப்பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களையே விநியோகிப்பதாகவும் -

ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து பணத்தை மீளப்பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தம்மிடம் இல்லை என்றும் - கைவிரித்து விடுகின்றனராம்.

இதனால், இந்த விண்ணப்பப் படிவங்களை கொழும்பிலிருந்து எடுத்து வரவேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ் விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணத்தில் கிடைப்பதற்கு வழிவகை செய்துதரப்படவேண்டும் என்றும் - வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-16)

# இலங்கை ஆசிரியர் சங்க கூட்டத் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கீழ்க்காணும் கிளைகளின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மற்றும் புதிய செயற்குழுத் தெரிவு ஆகியன பற்றிய திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கிளையின் கூட்டம் அடுத்த மாதம் 2ஆம் திகதி காலை 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும் -

வடமராட்சிக் கிளையின் கூட்டம் அடுத்த மாதம் 9ஆம் திகதி காலை 10மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் -

யாழ்ப்பாணக் கிளையின் கூட்டம அடுத்த மாதம் 12ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும் -

தீவகக் கிளையின் கூட்டம் 12ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியிலும் -

நடைபெறும் என்று சங்கத்தின் செயலாளர் எ.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (எ-10)

# சிறப்புற நடைபெற்ற 'துளிர்' சஞ்சிகை வெளியீடு

யாழ்.சிறுவர் ஊடகத்துறைக் குழுவினால் வெளியிடப்படும் 'துளிர்' சஞ்சிகையின் 4ஆவது வெளியீட்டுவிழா, நேற்றுமுன்தினம் பிற்பகல் சிற்றி ஹோலில் நடைபெற்றது.

ஊடகத்துறைக் குழுத் தலைவர் ஏ.நளாயினி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வட இலங்கைப பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி, உபதலைவர் எஸ்.இராமச்சந்திரன், சிறுவர் ஊடகத்துறை இணைப்பாளர் சதீஸ் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இணைப்பாளர் தற்பரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நூல் சிறுவர் பாதுகாப்புப் பிரிவினதும் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினதும் அனுசரணையுடன் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. (எ-9)







'துளிர்' சஞ்சிகை வெளியீட்டில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.

(படங்கள்:- ரமணன்)

## கொடிகாமத்தில் காலாவதியான பொருள்கள் அழிப்பு

கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களமீது சுகாதார பகுதினர் நடத்திய திடீர்ப் பரிசோதனையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான உணவுப் பொருள்களும், பழுதடைந்த உணவுப் பொருள்களும் கைப்பற்றி பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்ட சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு நடத்திய இப் பரிசோதனையில் பழுதடைந்த பணிஸ், கேக் மற்றும் திகதி காலாவதியான பிஸ்கட், இனிப்பு உட்பட உணவுப் பண்டங்கள கைப்பற்றி அழிக்கப்பட்டதாக கொடிகாமம பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.(ஒ-117)

## பயிற்சி வகுப்பு

யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரை மத்தி கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

- காரை மத்தி கிராம உத்தியோகத்தர் எஸ்.கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த பயிற்சி வகுப்பில், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் கே.சிவராசசுந்தரம் மற்றும் சமாசக் கல்வி உத்தியோகத்தர் திருமதி ச.பரமானந்தம் ஆகியோர் 'சி.க.கூ.சங்கங்களை மீள இயங்கச் செய்வதற்கான. சட்டரீதியாக மேற்கொள்ளத் தகுந்த நடவடிக்கைகளின் படிமுறைகள்', 'சமாச திட்டங்களும் உறுப்பினர்களின் பொறுப்புகளும்' ஆகிய தலைப்புக்களில் கருத்துரைகள் வழங்குவர். (எ-73)

## கரந்தாய் குளத்தருகே மலசலகூடங்கள் அமைப்பு

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தினர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயக்கச்சி, கரந்தாய் குளத்திற்கு அருகில் இரண்டு மலசலகூடங்களை அமைத்துள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் பயணிகளின் நலன்கருதி இந்த மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கையில் இருந்து வரும் மக்கள் இக்குளத்தருகேயுள்ள காணியில் பகல் உணவு சமைத்து, உணவருந்தி பின்னர் பயணத்தை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. (எ-117)

## ஜி.ரி.இசற் உதவியுடன் தென்மராட்சியில் புதிதாக 200 வீடுகள் அமைக்கப்படும்

தென்மராட்சி,ஜன.27

தென்மராட்சி பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 14 கிராம அலுவலர் பிரிவுகளில் தலா 15 வீடுகள் வீதம் மொத்தம் 200 வீடுகளை அமைத்துக் கொடுக்க ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

தாவளை, இயற்றாலை, மட்டுவில் மத்தி, மட்டுவில் - நுணாவில், சரசாலை தெற்கு, சந்திரபுரம், கைதடி-நுணாவில், மண்டுவில், நாவற்குழி மேற்கு, சாவகச்சேரி வடக்கு, கோவிலாக்கண்டி, மட்டுவில் கிழக்கு கோயில் குடியிருப்பு, தென் மட்டுவில், நுணாவில் மத்தி ஆகிய பிரிவுகளிலேயே வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான பயனாளிகள் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவர். இவர்களை கிராமிய மட்டக் குழுவினர் தெரிவு செய்வர். பின்னர், அவர்களது பெயர்ப் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# கல்விச்சாலைக் காட்சிகள்



வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அண்மையில் நடத்திய கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வை கல்லூரி அதிபர் எம்.அரியரெத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினரான சிரேஷ்ட விரிவுரையாளர் பொ.ஆழ்வாப்பிள்ளை மற்றும் சங்க உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (எ)



கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற நூல் நிலையத் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட கொழும்பு நேச்சர் லங்கா ரூஸ் உரிமையாளர் இ.விஜயகுமார் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினரான லண்டன் அக்சைசஸ் நிறுவனப் பணிப்பாளர் சு.ஸ்கந்ததேவா மற்றும் மதத்தலைவர்கள், பாடசாலை அதிபர் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-180)



வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசுத்தினம் அண்மையில் நடைபெற்றபோது ஆரம்பப்பிரிவு மாணவர்கள் நிகழ்த்திய கலைநிகழ்வைப் படத்தில் காணலாம். (எ)



கச்சாய் அ.த.க. பாடசாலையின் நூலகத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

(எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வாடகைக்கு வீடு தேவை

சிவத் தியான நிலையம் ஒன்று நடத்துவதற்கு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. தகுந்த வாடகை வழங்கப்படும். (நல்லூர் சுற்றாடலில் விரும்பத்தக்கது. கடிதமூலமாகவோ, நேரிலோ தொடர்புகொள்ளலாம். இல. 258, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 222 2442. (13716)

## For Sale Dental Chair

Dental Chair மற்றும் அத்துடன் இணைந்த உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.திருச்செல்வம், "வளனகம்", சக்கோட்டை., அல்வாய். (சி-26240)

## தவறிவிட்டது

சரவணை மாணிக்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், அடைவு துண்டும் ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: குமாரசாமி வீதி, நல்லூடை, புத்தூர் கிழக்கு.

(13744)

## காணி விற்பனைக்கு

பாஷையூரில் புனித அந்தோனியார் கோயிலுக்கு அண்மையில் புங்கங்குளம் வீதியில் வீடு கட்டக்கூடிய 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.திருச்செல்வம், 'வளனகம்', சக்கோட்டை, அல்வாய்.

(சி-26241)

## மணமகள் தேவை

இந்து உயர் கௌரவ குடும்பம், 43 வயது, சதயம் 8 செவ்வாய் (பாவம் குறைவு), சொந்தமாக நிறுவனம் நடத்தும் விவாகரத்துப் பெற்றவருக்குத் தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகக் குறிப்பு உட்பட சகல விவரங்களையும் அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல.1759, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (13707)

## மணமகன் தேவை

விவசாய விஞ்ஞானப் பட்டம்பெற்று, செய்துகாட்டுநர் பதவி வகிக்கும் உதயச் செவ்வாய் தோஷமுள்ள, கிரகபாவம் 80வரை காணப்படுகிற, 10.01.1970இல் பிறந்த, அவிட்டம், மகரராசி, கௌரவ குடும்பப் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. கடிதமூலம்/நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். திரு.V.A.சிவராசா (ஜோதிடர்), 152B, அரசடி றோட், கந்தர்மடம்.

(13758)

---

# சோதிடர் சிவராசாவினை பாராட்டுகின்றோம்



சோதிடப் பணியில் வெள்ளிவிழா (25 ஆண்டுகள்) நிறைவுசெய்த எனது அன்பர்

### திரு. V.A.சிவராசா

*(B.A. B.Phil. Dip.inEd. SLPS*
அதிபர், ஆனந்த வித்தியாலயம் - நல்லூர்)
அவர்கள் மென்மேலும் சோதிடப் பணியில் சிறப்புற வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

**அற்புதா றேடிங் கொம்பனி**
198(404A) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**Distributor:**
★ J.K.Copier ★ Rotomac -Pall pens
★ Camlin Products. (13756)

விற்பனையாகிறது!
வெள்ளிவிழா வெளியீடு
2003/2004 - ராசி பலன்
*(சுபானு வருடம் உங்களுக்கு எப்படி)*

---

# நன்றியும் பாராட்டும்



18.01.2003 சனிக்கிழமையன்று எம்மால் வீதியில் தவறவிடப்பட்ட தங்க நெக்லஸைக் கண்டெடுத்து கிராம சேவையாளர்மூலமாக எம்மிடம் ஒப்படைத்த நல்மனம் கொண்டவரான

### செல்வி மிதுலா வரதராஜா

*(தரம் 9 மாணவி,*
*தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,*
*பழைய மாணவி, சுன்னாகம்*
*திருஞானசம்பந்த வித்தியாசாலை)*

அவர்களையும் அவரது நற்செயலுக்காக நாம் பாராட்டி அவருக்கு நன்றி கூறுவதுடன அவருக்கு அறிவு புகட்டிய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

*ஐயனார் கோயிலடி,*
*மல்லாகம்.* (13795) **திரு.திருமதி குமாரதாசன்.**

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கணபதிப்பிள்ளை அன்னம்மா

ஊரங்குனையைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரம் சோடாக்கொம்பனி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அன்னம்மா நேற்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மகாலிங்கம் (சுவிஸ்), அன்னலிங்கம் (சுவிஸ்), சாந்தலிங்கம் (சுவிஸ்), கனகலிங்கம், சொர்ணலிங்கம் (லண்டன்), சசிகுமார், புஸ்பராணி, செல்வராணி, செல்வகுமாரி (ஜேர்மன்), இந்திராணி, பவளராணி, கமலராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசம்மா, மனோன்மணி, கண்மணி, பாக்கியம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மலர், றஜனி, பவானி, றசிதா, சிவபாதம், செல்வராசா, விஜயரட்ணம், மகேந்திரம், தவராசா (லண்டன்), கனகரட்ணம் (வசந்தன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் தகனக்கிரியைக்காக மல்லாகம் தொந்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகாலிங்கம் (மகன்),
அரசன் (மருமகன்).

*சோடாக்கொம்பனி ஒழுங்கை,*
*துர்க்காபுரம், மல்லாகம்.* (13763)

## கேசவபிள்ளை தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஊழியர், மின்சாரசபை)

சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேசவப்பிள்ளை தனபாலசிங்கம் நேற்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கநேசத்தின் அன்புக் கணவரும் டினேஸ்குமார் (யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், மொறட்டுவ பல்கலைக்கழக 2ஆம் வருட பொறியியற் பீட மாணவனும்), சதீஸ்குமார் (யாழ். இந்து பழைய மாணவன்), சயந்திரகுமார் (மாணவன், சாவகச்சேரி இந்து கல்லூரி), கயலினி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

*பசுபதியார் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (13765)

---

# தென்மராட்சி ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரிச் சங்கம்

சாவகச்சேரி

## 12 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 02.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

புதிய ஆண்டுக்கான நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெறவுள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சந்தா, சந்தா நிலுவை அறவீடும், புதிய அங்கத்தவர் இணைப்பும் அன்றைய தினம் நடைபெறும்.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் அங்கத்தவர்களுக்கு பஞ்சாங்க கலண்டர் இலவசமாக வழங்கப்படும்.

மா.துரைராசா,
செயலாளர்.

(C/26237)

---

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் தைத்திங்கள் 13ஆம் நாள் இன்று (27.01.2003) திங்கட்கிழமை பகல் 10.16 மணிமுதல் 11.36 மணிவரையுள்ள (புதியநேரம்) மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**கிரிதரன்**
(கிரி)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுபாஜினி**
(சுபா)
அவர்களுக்கும்

நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் இறைவன் திருவருள் துணையுடன் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

திரு. திருமதி இரத்தினசிங்கம்
திரு. திருமதி சி.சற்குணராஜன் (குணம் & வாணி)
திரு. இ.தயாபரன்
73, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021-222 2782

திரு. திருமதி கு.இராசரத்தினம்
(புங்குடுதீவு - 2)
3/8, கேசாவில் முதல் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(13705)

---

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
04
✦
05
✦
1940



மறைவு
06
✦
02
✦
2002

## திருமதி செல்வரட்ணம் சிவராஜமலர்

*திதி: 27.01.2003*

கண்ணின் மணிகளாகக் கணவரையும் மக்களையும்
எண்ணிப் பராமரித்து எமைப் பிரிந்த சீமாட்டியே!
ஆண்டொன்று சென்றாலும் அணையாத திருமுகமே!
காலங்கள் ஓடினாலும் உங்கள் நினைவலைகள் ஓடிடுமா?
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா அம்மா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முகவரி:
G.P.S.றோட்,
கல்வியங்காடு. (13550)

பருத்தித்துறை, மாதனை

# ஸ்ரீ காளியம்மன் கோயில்

## பிரதிஷ்டா பஞ்ச குண்ட

# மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

27.01.2003

## அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம். சைவத்தமிழர்களின் உயரிய வழிபாட்டில் காளி வழிபாடு மிகவும் தொன்மையானது. பருத்தித்துறை, மாதனை திருப்பதியில் பல தலைமுறையாக வழிபட்ட அம்பாள் திருக்கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். சைவத் திருக்கோவில்கள் யாவும் புனிதமாகப் பராமரிக்க வேண்டும் என்பது எமது அமைச்சின் முதன்மைக் குறிக்கோளாகும். குறிப்பாக தொன்மைமிக்க ஆலயங்களை கிராமந்தோறும் எம்மவர் பாரம்பரிய பண்பாட்டோடு புனிதப்படுத்த வேண்டியது இன்றைய கட்டாய கடனாகும். அவ்வகையில் மாதனை காளி கோவில் அன்பர்கள் தமது அயரா முயற்சியால் திருப்பணிகளை நிறைவேற்றி கும்பாபிஷேகம் நிகழ்த்துவது வாழ்த்துக்கும் நன்றிக்கும் உரிய விடயமாகும். அம்பாளின் கும்பாபிஷேகத்தோடு நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாக பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

இல. 248, 2/1 காலி வீதி
கொழும்பு - 04.

**கௌரவ தி.மகேஸ்வரன் (பா.உ.)**
*இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்*

## ஒன்றியத் தலைவரின் ஆசி

எல்லாம்வல்ல அம்பிகையின் குடமுழுக்கு பெரும் சாந்தி விழா இன்று நடைபெறுவதையிட்டு நாம் அளவற்ற ஆனந்தம் அடைகிறோம்.

12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பாபிஷேகம் மிகவும் உத்தமமானதாகும்.

எமது இல்லங்கள் எப்படி புனரமைப்புச் செய்யப்பட்டு சிறப்பாக இருக்கின்றதோ, இறைவன் ஆலயங்களும் காலத்திற்கு காலம் புதுப் பொலிவு பெற்று தெய்வீக சக்தியுடனும் விளங்கிவருவதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம்.

நாட்டின் அமைதி, சமாதானம் கிடைத்துள்ள இக்காலத்தில் காளி அம்பாளின் குடமுழுக்கு பெரும் சாந்தி விழா நடைபெறுவது கிடைத்தற்கரிய பெரும்பேறாகும். நிரந்தர அமைதி, சமாதானம், சகவாழ்வு கிடைக்க வேண்டி அம்பிகையைச் சரணடைவோம். கும்பாபிஷேகம் நடத்தும் சிவாசாரியப் பெருமக்கள், ஆலயப் பரிபாலன சபையினர், அம்பிகை அடியார்கள் அனைவரும் இன்றைய நன்னாளில் எல்லா நலன்களும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ அம்பிகையின் பாதாரவிந்தங்களை வேண்டி சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவர், சர்வபோதகாசாரியார் என்ற நிலையில் எனது ஆசிகள் என்றும் கிடைப்பதாகுக!

*"லோகா சமஸ்தாசுகினோ பவந்து"*

தலைவர்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

**பிரம்மஸ்ரீ பரமேஸ்வர. மனோகரக் குருக்கள்**

## கும்பாபிஷேகத்தில் தைலாப்யங்கம்

புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தில் அனுக்ஞை முதல் மண்டலாபிஷேகமீறாக 64 கிரியைகள் கூறப்பட்டிருக்கின்றன.


இவற்றுள் தைலாப்யங்கம் என்று கூறப்படும் எண்ணெய் சாத்தும் கிரியை முக்கியமானதும் பக்தர்களால் மிகவும் விரும்பப்படும் கிரியையும் ஆகும். ஸ்ரீ ருத்ரத்தில்

அயம்,மே, ஹஸ்தொ பகவான்

அயம் மே பகவத்தர: என்று கைகளை விசேஷமாகக் கூறுகிறார். "எனது கைகள் கடவுளுக்குச் சமனானதாகும். இன்னும் சொல்லப்போனால் கடவுளைவிட மேலானதாகும். ஏனென்றால் "அயம் சிவாபிமர்ஷினா"

இது இறைவனைத் தொட்டு அளையக்கூடியதாக இருக்கிறது." ஆகவே ஓர் ஆத்மாவின் கைகள் செய்த புண்ணியம் மஹா கும்பாபிஷேகத்தில் அறியக்கூடியதாக இருக்கிறது. குழந்தைகளை ஸ்பரிசிக்கும் போது ஏற்படும் இன்பம் இறைவனுக்கு இரு கைகளாலும் எண்ணெய் சாத்தும்போது ஏற்படுகிறது. பருத்தித்துறை, மாதனை காளி கோவிலில் நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்திலும் இந்த வாய்ப்பு அடியார்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும். மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் சிவாச்சார்யர் மந்திரம், கிரியை, பாவனை மூன்றிலும் சிறப்புள்ளவர். இக்கும்பாபிஷேகத்தின் பயனாக அவரும் பரிபாலன சபையினரும் கிராம மக்களும் அம்பாள் அனுக்கிரகம் பெற்று சீரும் சிறப்போடும் வாழ அம்பிகை திருவருள் கிடைக்க ஆசி கூறுகிறேன்.

**சிவஸ்ரீ த.மஹாதேவக் குருக்கள்**



## செஞ்சொற்செல்வரின் வாழ்த்து

பருத்தித்துறை, மாதனை திருப்பதியில் அருள் சுரந்தருளும் காளி அம்பாளின் குடமுழுக்கு வைபவம் நடைபெறுவதறிந்து அகமகிழ்கிறேன்.

"தனம் தரும் கல்வி தரும் தளர்வறியா மனம் தரும்" தாயாக விளங்குபவள் அம்பாள். கலைஞர்கள் நிறைந்த மாதனையில் மகத்துவம் நிறைந்த மகாகாளி "அஞ்சேல்" என்று அடியார்களுக்கு அபயமளிப்பவள். அன்னையின் ஆலயத்தை அன்பர்கள் அனைவரும் சேர்ந்து புனர்நிர்மாணம் செய்து புதுமெருகூட்டியுள்ளனர். ஆலய விருட்சமாக விளங்கும் வேப்ப மரத்தை அறிந்தவர்கள், கண்டவர்கள் வியந்து போற்றுவர். இயற்கை எழில்மிக்க இத்திருத்தலத்தைக் கட்டி முடித்து கும்பாபிஷேகம் காண வேண்டும் எனப் பலநாள் காத்திருந்த அடியவர்கள் இன்று கண்டு ஆனந்தமடைய அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. அம்பாளின் பேரருளால் அமைதியும் சாந்தி சமாதானமும் எம் மண்ணில் நிலைக்க இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

**ஆறு. திருமுருகன்**

## ஆதீனமுதல்வரின் அருளாசி

பருத்தித்துறை, மாதனைப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் காளி அம்மனுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி. அகில உலகங்களுக்கும் தாயாக இருக்கும் அம்பிகை இந்த ஆலயத்தில் காளி அம்பாளாக எழுந்தருளி இருக்கின்றாள். மக்களின் மனதில் ஏற்படும் குறைகளை நீக்கி சந்தோஷமான வாழ்வை அளிப்பது காளிதேவியின் அருளாகும்.

ஆலயத்தில் இடம்பெறும் கும்பாபிஷேகம் ஊருக்கும் இங்கு வாழும் மக்களுக்கும் புனிதமான ஒரு நிகழ்வாகும். மனித வாழ்வை மேம்படுத்த ஆலயந்தோறும் சென்று இறைவனை வழிபடவேண்டும் என எமது சமயம் வலியுறுத்துகின்றது. இதனையே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனவும் 'நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்கு' எனவும் குறிப்பிடுகின்றனர். இதனை மையமாக வைத்து நம்மவர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஆலயங்கள் அமைத்து அதனூடாக இறையருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழும் முறையை பின்பற்றி வருகின்றனர்.

இந்த ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ பிரார்த்திப்போமாக! அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

## ஆசியுரை

மகத்துவமான விழா கும்பாபிஷேக விழாவாகும். இதனைத் தரிசிப்பவர்கள் தாம் பல பிறவிகளில் ஆற்றிய பாவங்களுக்கு பரிகாரம் தேடிக் கொண்டு நிவர்த்தி அடைகின்றார்கள். அதனாலே இவ்விழாவிற்கு பெரும் சாந்தி என்று பெயரேற்பட்டது. இது அவ்வப்போது நடந்துவருவதால் நாட்டின் நலம் பெருகுகின்றது. நீதியும் தர்மமும் நிலைபெறுகின்றன. மாதம் மும்மாரி பொழிகின்றது. அதுவுமன்றி இறையருளைப் பெறுவதற்கு உலகங்களுக்குத் தாயாக இருப்பவளே, இந்த உலகைப் படைத்து நிலைத்திருக்கச் செய்கின்றாள். அவளே எப்போதும் தன்னுடைய குழந்தைகளைக் காப்பாற்றுகின்றாள். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றாள். அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை அவரவர் விருப்பத்திற்கேற்ப வழங்குகின்றாள். இந்த உலகில் ஜெகன் மாதா உருவங்களையும் பெயர்களையும் தாங்கி லீலை புரிகின்றாள். காளி அம்பாளுடைய இந்த மகா கும்பாபிஷேக நாளில் அருளும் ஆசியும் கிடைக்க அம்பிகையின் திருவடிகளைப் பணிகின்றேன்.

*சிவாகம கிரியாநிதி. கிரியா துரந்தரர்,*
*சக்தியாகம வித்துவ சிரோன்மணி.ஆகமபூஷணம்*
**சிவப்பிரம்மஸ்ரீ சி.சுரேஷ்வரக் குருக்கள்.**
*(மாதனை காளியம்மன் தேவஸ்தான பிரதமகுருவும் கும்பாபிஷேக பிரதம குருவும்)*

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

பருத்தித்துறைப் பிரதேசத்தில் மாதனையில் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் ஸ்ரீ காளி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகத்தையொட்டி வெளிவரும் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கலைஞர்கள் பலர் இருக்கும் இடமாக மாதனை ஸ்ரீ காளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளதுடன் ஆலயத்தின் தலவிருட்சமாக வேம்பு அமைந்துள்ளமையும் சிறப்பம்சம் எனக் குறிப்பிடலாம்.

இந்த ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புறவும் கும்பாபிஷேக மலர் சிறப்புறவும் அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ காளி அம்பாள் அருள் கிட்டுவதாக!

**ஆ.சிவசுவாமி**
*பிரதேச செயலர்,*
*வடமராட்சி வடக்கு,*
*பருத்தித்துறை.*

## வைத்திய கலாநிதியின் ஆசியுரை

சைவத் திருக்குழந்தையின் இன்னிசை பாடல் பெற்ற திருத்தலங்களை தன்னகத்தே கொண்ட இலங்கையின் வடபால் பருத்தித்துறை நகரைச் சார்ந்த சைவமும் தமிழும் சகல செல்வங்களும் சிறந்து விளங்கும் மாதனை என்னும் திருப்பதியில் மெய்யடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்ய தடித்த திருமேனி தாங்கி வேம்பு வன்னியை விருட்சமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் சர்வ பீஷ்ட வரத காளிதேவியின் அருளினால் புண்ணிய சீலரின் உதவி கொண்டு நலமாக அமைக்கப்பட்ட ஸ்ரீ காளி அம்பாளுக்கும் விநாயகர், சுப்ரமணியர், வன்னி தேவி, வைரவர் முதலிய மூல மூர்த்திகளுக்கும் அனுஷநட்சத்திரமும் சித்தயோகமும் கிருஷ்ணபட்ஷத் தசமியும் கூடிய இன்று பிரதிஷ்டாபஞ்ச குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை மனதார வாழ்த்துகிறேன். அம்பிகை அடியார்களுக்கு சகல சௌபாக்கியமும் கொடுக்க வேண்டுகிறேன்.

*வைத்திய கலாநிதி*
**மு.விநாயகமூர்த்தி**
*தலைவர்,*
*மாதனை நலன்கருது சங்கம், லண்டன் கிளை,*
*(மாவடி, மாதனை, பருத்தித்துறை.)*

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்:**

(13683)


**மாதனை நலன் கருது சங்கம்**
**லண்டன் கிளை**
*28, Windermere Road,*
*Southall, Middlesex,*
*UB1 2NZ,*
*U.K.*

தரமான மருந்து, பால்மா வகைகளை
மலிவான விலையில் பெற்றுக்கொள்வதற்கு:
**சிற்றி மெடிக்கல்**
299, பிரதான வீதி,
நீர்கொழும்பு.
தொலைபேசி இல.: 031 31768

கட்டடப் பொருள்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள:
**ராஜன் எலக்ரிக்கல்ஸ்**
பிரதான வீதி,
பருத்தித்துறை.

தரமான அச்சுவேலைகளைச் செய்துகொள்ளவும்
யாழ். - வவுனியா - கொழும்பு
பிரயாண சேவைக்கும்
**சிவன் அச்சகம் அன்ட் ரவல்ஸ்**
சிவன் வீதி,
பருத்தித்துறை.

உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
**தனுஷா தொலைத்தொடர்பு நிலையம்**
காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொலைபேசி இல.: 070-213148

உங்களுக்குத் தேவையான ஐஸ்கிறீம், ஐஸ்சொக், ஐஸ்பழம்
வகைகளை பெற்றுக்கொள்ளவும்.
பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
**ராஜகௌரி கிறீம் ஹவுஸ் அன்ட் ரவல்ஸ்**
மாதனை, பருத்தித்துறை.

திருமண மற்றும் ஏனைய கொண்டாட்ட
வைபவங்களுக்குத் தேவையான மணப்பந்தல்,
கதிரை, பாய் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள:
**ராஜா மணப்பந்தல் சேவை**
மாதனை, பருத்தித்துறை.

மரத்திலான தளபாடங்களை
சிறந்தமுறையில் செய்துகொள்ள
**சிவசோதி மரத் தொழிலகம்**
மாதனை,
பருத்தித்துறை.

யாழ். -வவுனியா-கொழும்பு மற்றும்
உள்ளூர் சேவைக்கும்
**தயாபரன் ரவல்ஸ்**
மாதனை,
பருத்தித்துறை.

யாழ். - பருத்தித்துறை மற்றும்
தூர இடங்களுக்கான பிரயாண
ஒழுங்குகளைச் செய்துகொள்வதற்கு
**சோதி ரவல்ஸ்**
மாதனை,
பருத்தித்துறை.

ஆலய கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்தும்
**வ.கணேசராசா**
**வ.விக்னராசா**
மாதனை, பருத்தித்துறை.

ஆலய கும்பாபிஷேகத்தை
சிறப்புற வாழ்த்தும்
**கு.சுரேந்திரராசா**
பாடசாலை வீதி,
மாதனை, பருத்தித்துறை.

# பல்கலை. அனுமதி கிடைக்காதோருக்கு அபயமளிக்கும் திறந்த பல்கலைக்கழகம்

பாரம்பரியமான பாடசாலைக் கல்வி முறைப்படி தரம் 1 இலிருந்து தரம் 13வரை முறைப்படி கல்வி பயிலும் வாய்ப்பைப் பல்வேறு காரணங்களால் இழந்தவர் பலர் எம்மத்தியில் உள்ளனர். இவர்களுள் பலர் திறமைசாலிகளாவர். தவிர்க்க முடியாத காரணத்தினால் ஆண்டு 5 இல் பாடசாலையை விட்டு விலகிய ஒருவர் அவரது 30ஆவது வயதில் பட்டதாரியாக விரும்பினால் அவர் பாரம்பரிய பல்கலைக்கழகத்தில் மாணவராக இணைந்து பட்டதாரியாக முடியாது. காரணம் ஒருவர் பாடசாலை கல்வி முறைப்படி வகுக்கப்பட்டிருக்கும் தரம் 1இலிருந்து தரம் 12 வரை ஒவ்வொரு தரத்திலும் சித்தி பெற்று ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்காக வேண்டப்படும் பாடங் களிலும் சித்தி பெற்று 'இசற்' புள்ளிமுறை உட்பட தேவையான புள்ளிகளைப் பெற்றால் மாத்திரமே பல்கலைக்கழகம் ஒன்றில் மாணவராக முடியும் என நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகும்.

பாடசாலைக் கல்வியை முறைப்படி பூரணப்படுத்தாதோருக்கும் பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காது, கவலை உறுவோருக்கும், அபயமளித்து பல்வேறு துறைகளில் டிப்ளோமா, பட்டம், பட்டமேற் தகைமைகளைப் பெறும் வாய்ப்பினை திறந்த பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது. இதன் பிராந்திய நிலையங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இதன் கற்கை நிலையங்கள் அம்பலாங்கொடை, அம்பாறை, அநுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, புத்தல, காலி, ஹற்றன், களுத்துறை, கேகாலை, குளியாப்பிட்டிய, குருணாகல், பொலன்னறுவ, இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

நெகிழ்ச்சித் தன்மை கொண்ட இந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ் அல்லது சிங்களம் வாசிக்கவும், எழுதவும் விளங்கிக்கொள்ளவும் தக்க 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இணைந்து கல்வி பெறலாம்.

வார இறுதி நாள்களிலும், விடுமுறை நாள்களிலும் கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் தொழில் புரிவோர் பலர் இப்பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டம் பெறமுடிகிறது. சில தகைமையுடையோருக்கு கற்றலில் சிறப்பான விலக்கு அளிக்கப்படுவதனால் இவர்கள் விரைவாகத் தமது கல்வியைப் பூர்த்தி செய்து பட்டதாரிகள் ஆகும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

இப்பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா, பட்டத்தின் பின் டிப்ளோமா போன்ற பல உயர் பட்டங்களைப் பெறும் வாய்ப்பு உண்டு. கற்கை நெறியின்

**ச.ஆ. கோபாலமூர்த்தி**

விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதைப் பூர்த்தி செய்யும் எவரும் இப்பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கலாம். போதிய கல்வி அறிவு பெற்றிராதோருக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டு உயர் கல்வித்துறைக்கு ஆயத்தம் செய்யப்படுகிறது. அடிப்படை பயிற்சியை நிறைவு செய்தவர்கள் உயர் கற்கைகளைத் தொடர வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

பாரம்பரிய பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளுக்குச் சமுகமளித்துக் குறிப்புகளை எழுதவேண்டும். திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி சார் விடயங்கள் அச்சடித்து வழங்கப்படுகின்றன. இதனால் இப் பல்கலைக்கழகத்தில் கட்டணம் அறவிடப்படுகிறது. விரிவுரைகளுக்குச் சமுகமளிக்காமல் சில நேர்முகக் கற்கைக்குச் சமுகமளித்தும் அச்சிட்ட பாடக்குறிப்புகளின் மூலம் இப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றோரில் 85% தொழில புரிவோர் என அறிப்படுகிறது.

பலருக்கு இலகுவான வழிமுறைகளில் பல்லூடகங்கள் மூலமாக மிக உயர் பட்டங்கள்வரை கல்வி வழங்கி வரும் இப் பல்கலைக்கழகத்தைப் பற்றிய அறிவு யாழ்ப்பாணத்தில் குறைவாக இருந்த போது 1990 களில் கட்டுரையொன்றை எழுதி இதனைப் பற்றிய அறிவை ஊட்டியிருந்தேன். இதனால் பலர் விஞ்ஞானமாணி, சட்டமாணி, பத்திரிகைத் துறை, உயர் தொழில் ஆங்கிலம், எந்திரவியல் தொழில்நுட்பம், முகாமைத்துவ டிப்ளோமா, தொழில் உரிமைத்துவமும் சிறுவணிக முகாமைததுவமும் போன்ற பல்வேறு துறைகளில் இணைந்து பயன்பெற்றனர்.

ஆனால், உதயனின் வாசகர் திருமுகத்தின் மூலம் திறந்த பல்கலைக்கழகம் எங்கே இருக்கிறது என்பதைக் கூட அறியாத பலர் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து திறந்த பல்கலைக்கழகத்தின் இணைப்பாளர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் அவர்களைச் சந்தித்து இவ்விடயம் பற்றி உரையாடினேன். அவர் கூறிய விடயங்கள் பின் வருமாறு:-

யாழ். - பிறவுண்வீதியில் தொழில் நுட்பக் கல்லூரிக்குத் தென்புறத்தில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 1994ஆம் ஆண்டு தொழில் உரிமைத்துவமும் சிறு வணிக முகாமைத்துவமும் கற்கை நெறியை 104பேரும் பட்டமேற்கல்வி டிப்ளோமாவை 45பேரும் உயர் தொழில் ஆங்கிலத்தை 665பேரும் கற்றுள்ளனர்.

யுத்தம் காரணமாக 2000, 2001இல கற்கை நடவடிக்கை எதுவும் இடம் பெறவில்லை. 2002இல் இரண்டு தொகுதிகளாக இடம்பெற்ற முகாமைத்துவ டிப்ளோமாவில் 72பேரும் தொழில் உரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவம் துறையில் 189 பேரும் கல்வி கற்றுள்ளனர். 2003ஆம் ஆண்டு 68பேர் விஞ்ஞானமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்துள்ளனர். இங்கு தகுதியான விரிவுரையாளர்கள் இருக்கின்றபோதிலும், இங்கு தகுதியான விரிவுரையாளர்கள் இல்லை எனக் கூறி இந்த மாணவர்களைக் கொழும்புக்கு வருமாறு கேட்கப்பட்டிருப்பதால தாமும் மாணவரும் அதிர்ச்சியடைந்திருப்பதாகவும் கூறினார்.

எந்திரவியல் டிப்ளோமாவிற்கு 350பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களது பதிவுகள் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறும். தொழில் உரிமைத்துவமும் சிறுவணிக முகாமைததுவமும் கற்கைக்கு 102பேர் விண்ணப்பித்துள்ளனர். முகாமைத்துவமானிக கற்கைக்கு 44பேர் பதிவு செய்துள்ளனர். ஆனால், தமிழில் இங்கு விரிவுரைகள் நடத்த அனுமதி இன்னமும் வழங்கப்படாது இருப்பது கவலைதரும் விடயமாக உள்ளது.

பாடநெறிகள் தொடர்பான விடயங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். எனவே ஆர்வலர்கள் திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு உரிய விவரங்களைப் பெற்றுப் பயனடைவார்களாக. கற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வோம்.

# மர அனுமதிப்பத்திரம் பெற்று சீவல் தொழிலில் ஈடுபடுக!

யாழ்ப்பாணம்,ஜன.27

சீவல் தொழிலில் ஈடுபடுவோர் தாம் சீவும் மரங்களுக்குரிய மர அனுமதிப்பத்திரங்களை மதுவரித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் சம்பந்தப் பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மதுவரித் திணைக்களத்தின் யாழ். பொறுப்பதிகாரி என்.சோதி.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சீவல் தொழிலில் ஈடுபடுவோர் மர 'அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்துடன் சீவல் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்ட மரங்களுக்கு திணைக்களத்தினால் வழங்கப்படும் இலக்கங்களையும் இடவேண்டும்.

மதுவரிப் பகுதியினரின் அனுமதிப்பத்திரம் இன்றி அல்லது இலக்கமிடப்படாத பனை, தென்னை மரங்களில் சீவல் தொழி லில் ஈடுபடுதல் சட்டவிரோதமான செயலாகும்.

இவ்வாறு சட்டவிரோதமாக சீவல் தொழிலில் ஈடுபடுவதற்கு பயன்படுத்தப்படும் மரங்கள் பற்றிய விவரங்களை மரச் சொந் தக்காரர்கள் தரவேண்டும். இல்லையேல் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-5)

# வலி. கிழக்கு தோட்டங்களில் புகையிலை செய்கை மும்முரம்

அரியாலை,ஜன.27

வலி. கிழக்குப் பிரதேசத்தில் விவசாயிகள் இம்முறை புகையிலை பயிரிடுவோர் ஆர்வம் காட்டியுள்ளனர்.

தோட்ட நிலங்கள் சீர் செய்யப்பட்டு புகையிலைப்பயிர்களை நடும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்ட வருவதைக்காண முடிகின்றது.

இதே வேளை -

இப்பகுதி தோட்டங்களில் ஏற்கனவே நடப்பட்ட புகையிலைக்கன்றுகள் திடீரென ஒருவித நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள புகையிலைக் கன்றுகளை அழித்து விட்டு அதே இடங்களில் புதிய கன்றுகளை நடும் பணியிலும் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். (ஐ-17)

## நன்றி நவிலல்

கர்த்தருக்குள் நித்திரையடைந்த

**திருமதி ஞானமணி துரைசிங்கம்**

அவர்களின் மரணச்சடங்கிலும் இறுதிக்கிரியைகளிலும் பங்குகொண்டோருக்கும் மலர்வளையங்கள் வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் தொலைபேசி, தந்தி, மடல்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் இன்னும் பற்பல வழிகளில் ஆறுதல் கூறியும் உதவிகள் புரிந்தோருக்கும் உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'ஞானபதி',
கோப்பாய் மத்தி, கோப்பாய். (13774)

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவனும்
மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் பீடமாணவனுமான
செல்வன் ஆ.டினோஜ்குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

**தனபாலசிங்கம்**

அவர்கள் 26. 01.2003 ஞாயிறன்று இவ்வுலகைவிட்டுப் பிரிந்ததையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்.இந்து நண்பர்கள்,
பொறியியல் பீடம் (A/L 2000) பேராதனைப் பல்கலைக்கழகம்.

(C/26246)

## 31ஆம் நினைவு நாள்

தோற்றம்
14 - 08 - 1916



மறைவு
28 - 12 - 2002

எமது குடும்பத்தலைவர்

**அமரர் தம்பு பொன்னையா**

அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.01.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

76/59, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (13771)

## மரண அறிவித்தல்

**கனகரட்ணம் சிவானந்தன்**

*(இளைப்பாறிய தபால் அதிபர், சங்கானை.)*

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பழைய தபாற் கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் சிவானந்தன் 25.01.2003 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 2மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*சங்கானை.* (13773)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 'கடல்வளம்' பாடநூல்கள் யாழ். எடுத்துவரப்பட்டன

பாடசாலைகளில் கடல் வளம் பாடத்தைப் போதிக்கும் ஆசிரிகளுக்கு வழங்குவதற்காக கடல் வளம் பற்றிய பாடப்புத்தகங்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

கொழும்பு தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் பயிற்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இப்பாடப் புத்தகங்கள் வெகு விரைவில் உரிய பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என்றும் -

கொழும்பிலிருந்து இவைகளைத் தரைமார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு வன்னியில் இயங்கும் ஜெயத்தீவுப் பகுதியினர் தமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கினர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.27

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்க அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகமும், தொண்டைமானாறு சிவானந்தா விளையாட்டுக்கழகமும் பங்குபற்றுகின்றன. (ஒ-5)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவுசெய்த கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிமுதல் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் போர்த் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

★ பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் சென்ற்சலஸ் விளையாட்டுக் கழகம். (ஒ-5)


## மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட

- தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக வெளியீடுகள்.
- தஞ்சாவூர் சரஸ்வதி மகால் வெளியீடுகள்.
- சைவ சித்தாந்த கழக வெளியீடுகள்.
- வாழ்வியல்/அறிவியற் களஞ்சியம்.
- தமிழ் அகராதிகள்/பல்பொருள் அகராதி.

இன்னும் பல்துறைசார் நூல்களை இன்று 27ஆம் திகதி தொடங்கி 29 ஆம் திகதிவரை மூன்று தினங்களுக்கு விசேட கழிவுவிலையில் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். புத்தகங்களை வாங்கவிரும்பும் மாணவர்கள் இந்த நாள்களில் எமது புத்தக நிலையத்தில் பார்வையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

(மாணவர்களுக்கு மட்டும் இந்தச் சலுகை)

**புதிய உயர் கல்லூரி புத்தகசாலை**
**ஆரியகுளம், யாழ்ப்பாணம்.**

(13770)



IIS

**புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

*காலம்:* 01.02.2003 காலை 9 மணி.

அநேக மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து Diploma கற்கைநெறிக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்
**IIS**
யாழ்ப்பாணம்.

(C/26247)

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
15 - 04 - 1933



மறைவு
27 - 01 - 2000

## அமரர்
## சின்னக்குட்டி குண்டுமணி

அன்புடனும் பண்புடனும்
ஆனந்தமாய் நாமிருக்கு
இயமனவன் நோய் வடிவில்
இடையினிலே உனை அழைக்க
எங்கு சென்றாய் எமைவிட்டு
என்று நாம் காண்பதுமை
எண்ணி எண்ணி நாமிங்கு
ஏங்குகிறோம் புரியலையா?

'குண்டுமணி நிவாஸ்'
கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்.

(13762)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவரத்தினம் இராசமணி

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி நவரத்தினம் இராசமணி 23.01.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் சிவநடராசா(இந்தியா), காலஞ்சென்ற இந்திரராசா, சந்திரராசா(பிரான்ஸ்), சற்குணராசா(பிரான்ஸ்), தவமலர்(சுழிபுரம்), மதிவதனி(ஜேர்மனி), வர்ண மகாராசா(பிரான்ஸ்), சிவானந்தராசா(பிரான்ஸ்), நித்தியானந்த ராசா(கனடா), சிறீஸ்கந்தராசா(சங்கானை பலநோ.கூ.சங்கம்), வசந்த ராசா(சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயலட்சுமி, சாரதா தேவி, சகுந்தலா, பகவத்கீதா, தவச்செல்வம், கணேசதாசன், சியாமளா, ரத்தினவள்ளியம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வர்களான பொன்னையா, செல்லத்துரை, சரஸ்வதி, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பிரமணியம், தம்பிஐயா, நாகேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயரட்ணம், சிவனேஸ்வரி, சிவறஞ்சன், சிவறஞ்சினி, பிரியதர்சினி, சிவதர்சினி, சுபதர்சினி, பார்த்திபன், பிரதீபன், கௌசல்யா, இந்துமதி, சங்கீதா, பவதாரணி, சாருசா, தினேஸ், சர்மினி, ஜிந்தா, விஜிந்தன், நவனியா, சந்தோஷ், சங்கீத், டர்சன், திவேஸ், பிரகாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் வாகீசனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.01.2003) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.
T.P.: 070 212314
021 2225271

தகவல்:
சிறீஸ்கந்தராசா
(மகன்)

(13717)

## திருமதி
## உருக்குமணி சதாசிவம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை)

கோப்பாய் வடக்கு, மார்க்கம்பரையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி உருக்குமணி சதாசிவம்பிள்ளை நேற்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சி.சதாசிவம்பிள்ளையின் (இளைப்பாறிய அதிபர், யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை) அன்பு மனைவியும் திருமதி வி.லோகேஸ்வரி, ச.லோகேஸ்வரன்(ஆஸ்திரேலியா), ச.பிஜகதீஸ்வரன்(முன்னாள் ஐக்கிய வியாபாரச் சங்கம்), ச.சிவநாதன் (முன்னாள் யாழ்.ப.நோ.கூ.சங்கம்), ச.குகநாதன்(யோகு ரேடர்ஸ்), ந.சிவராணி (ஜேர்மனி), ம.தவமணிதேவி(பொது நூலகம், கொக்குவில்), லோ.சிவகலை(ஜேர்மனி), சு.கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் கு.விஜயரட்ணம்(ஓய்வூதியர் J.P.), லோ.பரமேஸ்வரி (ஆஸ்திரேலியா), ஜெ.பராசக்தி, சி.திருமங்கைநாயகி, கு.ஜானகி(யாழ் மாநகரசபை), வெ.நவினச்சந்திரன்(ஜேர்மனி), செ.மகேந்திரன்(யாழ்.பல்கலைக்கழகம், மருத்துவபீடம்), அ.லோகநாதன்(ஜேர்மனி), சு.சுதாகரன்(யாழ்.மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செ.செல்லையா, வே.சிவரட்ணம், ப.வாலாம்பிகை(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயகுமார்(டாக்டர்), சிவகுமாரி (ஆசிரியை), விஜயகுமாரி, ஜெ.குருபரன்(மொறட்டுவ பல்கலைக்கழகம்), ஜெ.பிரேம்குமார் (யாழ். இந்துக் கல்லூரி), ந.இளந்துளசி, ந.இளங்கீரன்(ஜேர்மனி), ம.பிரியங்கன், ம.துஷியங்கன் (யாழ். இந்துக் கல்லூரி), லோ.அருண்குமார் (ஜேர்மனி), சு.சிவானுஜன்(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), சு.தனுஜா (ஞானக்குழந்தை), சு.அனிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2003) திங்கட்கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவபதி"
71, மணல்தறை ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(13760)

## குறுகியகால பயிற்சிநெறி

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின கொத்தணி, அதன் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் மகளிர்களுக்கு விசேட குறுகியகால பயிற்சிநெறியொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம திகதியிலிருந்து 7ஆம் திகதிவரை ஐந்து தினங்கள் மானிப்பாயிலுள்ள வலிகாமம் கொத்தணி அலுவலக மண்டபத்தில் பயிற்சிநெறி இடம்பெறும்.

மேற்படி கொத்தணியின் தலைவா க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சிநெறியின்போது சமூக முன்னேற்றம், சமூக பொருளாதாரம், கூட்டுறவு, விபத்து, ஓய்வு நலன் திட்ட நடைமுறைகள், கணக்கு வைத்தல முறைகள் தொடர்பான பல துறைகளில் பயிற்சிகளும், கருத்தரங்குகளும இடம்பெறும். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இரத்தினம் மற்றும் கூட்டுறவுத் திணைக்களம், வலிகாமம் கல்வி வலயம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் பயிற்சிநெறியின்போது விரிவுரைகள் நிகழ்த்துவர்.

பயிற்சிநெறியில் கலந்துகொள்ளும பயிற்சியாளர்களுக்கு, பயிற்சிக் காலத்துக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன. (எ-152)

## 'றோலர்' பயன்படுத்தி மீன்பிடிக்கத் தடை

யாழ்குடாக்கடலிலுள்ள பந்தலடி, கொழும்புத்துறை, அரியாலை, கேரதீவு ஆகிய இடங்களிலுள்ள கடற் பகுதிகளில் 'றோலர்'மூலம் மீன் பிடிக்கக் கூடாதென, வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினாலும் குருநகர் மீனவர் சங்கத்தினாலும் மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், கல்முனை தொடக்கம கீரிக்குடா வரையுள்ள கரையோரப் பிரதேசங்களிலிருந்து நான்கு மைல்களுக்கப்பால் மீன்பிடிக்கத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில், தீவுப் பகுதி கரையோரத்திலிருந்து நான்கு மைல்களுக்கு அப்பால் மீன் பிடிக்கலாம் எனவும் -

வலைப்பாடு தொடக்கம் இரணைதீவு வரையான கடற் பிரதேசத்தில் றோலர்மூலம் தொழில் செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் இந்தச் சங்கங்கள் அறிவித்துள்ளன.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 443 |
| திகதி | 24.01.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல.
5695151-5709684

வெற்றி இலக்கங்கள் **03 21 45 54**

லக்கினம்
விருச்சிகம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 3,075,000/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,783,700/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 317,326 | 10 | 3,173,260 |
| 2 இலக்கங்கள் | 29,139 | 20 | 582,780 |
| 1 இல + லக்கினம் | 28,830 | 30 | 864,900 |
| 2 இல + லக்கினம் | 2,682 | 100 | 268,200 |
| 3 இலக்கங்கள் | 779 | 500 | 389,500 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,075,000 | - |
| மொத்தம் | 378,831 | - | 6,033,640 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 6,033,640/-

தொடர் இல. 4718837க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 28ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5704589-4-98
5700158-7-43
5698999-3-60
5707170-2-77
5709211-4-98

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3363495 இருந்து
3381871 வரை
சீட்டிழுப்பு இல. 1370
திகதி 25.01.2003

வெற்றி எண்கள்
**18 28 31 42 47**

போனஸ் எண்
**16**

ஜக்பொட் பரிசு
ரூபா.3,354,850/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,354,850/- | 3,354,850/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 111 | 10,000/- | 1,110,000/- |
| 3 | 5,911 | 500/- | 2,955,500/- |
| 2 | 96,791 | 20/- | 1,935,820/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 18ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 118,331 | 10/- | 1,183,310/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,839,480/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 2383501க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 29ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3376137-6-56
3366921-8-62
3365142-1-96
3363878-5-71
3371263-9-92

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள்



தென்னாபிரிக்கா, சிம்பாவே மற்றும் கென்யா ஆகிய நாடுகளின் எட்டாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் அடுத்தமாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இறுதிப் போட்டி மார்ச் மாதம் 23ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஜொகர்னஸ்பேர்க் நகரில் நடைபெற வுள்ளது. இம்முறை ஒலிம்பிக் பந்தயங்களைப் போலவே போட்டியின் முதல் நாளான பெப்ரவரி 8ஆம் திகதி வைபவரீதியான விழா இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரில் 54ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. போட்டியிடும் அணிகள் 'ஏ' மற்றும் 'பி' என இரு குழுக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதற்சுற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் 'சுப்பர் சிக்ஸ்' போட்டிகளில் பங்குபற்றும். இதில் தெரிவாகும் நான்கு அணிகள் அரை இறுதிப் போட்டியில் பங்குபற்றும். குழு ரீதியாக அணிகளின் விவரம் வருமாறு:

குழு 'ஏ'

ஆஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, சிம்பாப்வே, நெதர்லாந்து, நமீபியா.

குழு 'பி'

இலங்கை, மே.இ.தீவுகள், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், கனடா, கென்யா.

## 8ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் ஆட்டநேர விவரம்

| திகதி | விளையாடும் அணிகள் | | | மைதானம் | பகல்/இரவு | இலங்கை நேரம் பி.ப. |
|---|---|---|---|---|---|---|
| பெப்.9 | தென்னாபிரிக்கா | எதிர் | மே.இ.தீவுகள் | கேப்டவுண் | பகல்/இரவு | 6.00 |
| பெப்.10 | சிறிலங்கா | எதிர் | நியூசிலாந்து | புளும் பொண்டீன் | பகல் | 1.00 |
| பெப்.10 | சிம்பாப்வே | எதிர் | நமீபியா | ஹராரே | பகல் | 1.00 |
| பெப்.11 | ஆஸ்திரேலியா | எதிர் | பாகிஸ்தான் | ஜொகர்னஸ்பேர்க் | பகல்/இரவு | 6.00 |
| பெப்.11 | பங்களாதேஷ் | எதிர் | கனடா | டேர்பன் | பகல்/இரவு | 6.00 |
| பெப்.12 | தென்னாபிரிக்கா | எதிர் | கென்யா | பெர்ச்செப்சட்ரோம் | பகல் | 1.00 |
| பெப்.12 | இந்தியா | எதிர் | ஹொலண்ட் | போர்ள் | பகல் | 1.00 |
| பெப்.12 | மே.இ.தீவுகள் | எதிர் | நியூசிலாந்து | போட் எலிசபெத் | பகல் | 1.00 |
| பெப்.13 | சிம்பாப்வே | எதிர் | இங்கிலாந்து | ஹராரே | பகல் | 1.00 |
| பெப்.14 | சிறிலங்கா | எதிர் | பங்களாதேஷ் | பிற்றமரிட்ஸ்பேக் | பகல் | 1.00 |
| பெப்.15 | கென்யா | எதிர் | கனடா | கேப்டவுண் | பகல்/இரவு | 6.00 |
| பெப்.15 | ஆஸ்திரேலியா | எதிர் | இந்தியா | செஞ்சூரியன்பார்க் | பகல் | 1.00 |
| பெப்.16 | தென்னாபிரிக்கா | எதிர் | நியூசிலாந்து | ஜொகர்னஸ்பேர்க் | பகல் | 1.00 |
| பெப்.16 | இங்கிலாந்து | எதிர் | ஹொலண்ட் | ஈஸ்ட் லண்டன் | பகல் | 1.00 |
| பெப்.16 | பாகிஸ்தான் | எதிர் | நமீபியா | கிம்பெர்லி | பகல் | 1.00 |
| பெப்.18 | மே.இ.தீவுகள் | எதிர் | பங்களாதேஷ் | பெனோனி | பகல் | 1.00 |
| பெப்.19 | இங்கிலாந்து | எதிர் | நமீபியா | போர்ட் எலிசபெத் | பகல் | 1.00 |
| பெப்.19 | இலங்கை | எதிர் | கனடா | போர்ள் | பகல் | 1.00 |
| பெப்.19 | சிம்பாப்வே | எதிர் | இந்தியா | ஹெராரே | பகல் | 1.00 |
| பெப்.20 | ஆஸ்திரேலியா | எதிர் | ஹொலண்ட் | பெர்ச்செப்ஸ்ட்ரோம் | பகல் | 1.00 |
| பெப்.22 | இங்கிலாந்து | எதிர் | பாகிஸ்தான் | கேப்டவுண் | பகல் | 1.00 |
| பெப்.22 | தென்னாபிரிக்கா | எதிர் | பங்களாதேஷ் | புளும் பொண்டீன் | பகல் | 1.00 |
| பெப்.23 | மே.இ.தீவுகள் | எதிர் | கனடா | செஞ்சூரியன்பார்க் | பகல் | 1.00 |
| பெப்.23 | இந்தியா | எதிர் | நமீபியா | பீற்றஸ்மரிஸ்பேர்க் | பகல் | 1.00 |
| பெப்.24 | சிம்பாப்பே | எதிர் | ஆஸ்திரேலியா | புளுவாயோ | பகல் | 1.00 |
| பெப்.24 | சிறிலங்கா | எதிர் | கென்யா | நைரோபி | பகல் | 1.00 |
| பெப்.25 | பாகிஸ்தான் | எதிர் | ஹொலண்ட் | போர்ள் | பகல் | 1.00 |
| பெப்.26 | இங்கிலாந்து | எதிர் | இந்தியா | டேர்பன் | பகல்/இரவு | 6.00 |
| பெப்.26 | நியூசிலாந்து | எதிர் | பங்களாதேஷ் | கிம்பர்ளி | பகல் | 1.00 |
| பெப்.27 | தென்னாபிரிக்கா | எதிர் | கனடா | ஈஸ்ட் லண்டன் | பகல் | 1.00 |
| பெப்.27 | ஆஸ்திரேலியா | எதிர் | நமீபியா | பொட்செப்ஸ்ரோம் | பகல் | 1.00 |
| பெப்.28 | சிறிலங்கா | எதிர் | மே.இ.தீவுகள் | கேப்டவுண் | பகல்/இரவு | 6.00 |
| பெப்.28 | சிம்பாப்வே | எதிர் | ஹொலண்ட் | புளுவாயோ | பகல் | 1.00 |
| மார்ச 01 | கென்யா | எதிர் | பங்களாதேஷ் | ஜொகர்னஸ்பேர்க் | பகல் | 1.00 |
| மார்ச 01 | பாகிஸ்தான் | எதிர் | இந்தியா | செஞ்சூரியன்பார்க் | பகல் | 1.00 |
| மார்ச 02 | ஆஸ்திரேலியா | எதிர் | இங்கிலாந்து | போட் எலிசபெத் | பகல் | 1.00 |
| மார்ச 03 | நியூசிலாந்து | எதிர் | கனடா | பெனோனி | பகல் | 1.00 |
| மார்ச 03 | தென்னாபிரிக்கா | எதிர் | சிறிலங்கா | டேர்பன் | பகல்/இரவு | 6.00 |
| மார்ச 03 | நமீபியா | எதிர் | ஹொலண்ட் | புளும் பொண்டீன் | பகல் | 1.00 |
| மார்ச 04 | மே.இ.தீவுகள் | எதிர் | கென்யா | ஹிம்பர்ளி | பகல் | 1.00 |
| மார்ச 04 | சிம்பாப்வே | எதிர் | பாகிஸ்தான் | புளுவாயோ | பகல் | 1.00 |
| **சுப்பர் சிக்ஸ் போட்டிகள்** | | | | | | |
| மார்ச 07 | 1ஏ | எதிர் | 1பி | கென்டுரியன் | பகல் | 1.00 |
| மார்ச 07 | 2ஏ | எதிர் | 2பி | கேப்டவுண் | பகல்/இரவு | 6.00 |
| மார்ச 08 | 3ஏ | எதிர் | 3பி | புளும் பொண்டீன் | பகல் | 1.00 |
| மார்ச 10 | 2ஏ | எதிர் | 1பி | ஜோகர்னஸ்பேர்க் | பகல் | 1.00 |
| மார்ச 11 | 1ஏ | எதிர் | 3பி | போட் எலிசபெத் | பகல் | 1.00 |
| மார்ச 12 | 3ஏ | எதிர் | 2பி | புளும்பொன்டின் | பகல் | 1.00 |
| மார்ச 14 | 2ஏ | எதிர் | 3பி | கென்டுரியன் | பகல் | 1.00 |
| மார்ச 15 | 3ஏ | எதிர் | 1பி | ஈஸ்ட் லண்டன் | பகல் | 1.00 |
| மார்ச 15 | 1ஏ | எதிர் | 2பி | டேர்பன் | பகல்/இரவு | 6.00 |
| **அரையிறுதிப் போட்டிகள்** | | | | | | |
| மார்ச 18 | 1சூப்பர் சிக்ஸ் | எதிர் | 4சூப்பர் சிக்ஸ் | போட் எலிசபெத் | பகல் | 1.00 |
| மார்ச 20 | 2சூப்பர் சிக்ஸ் | எதிர் | 3சூப்பர் சிக்ஸ் | டேர்பன் | பகல்/இரவு | 6.00 |
| **இறுதிப் போட்டி** | | | | | | |
| மார்ச 23 | | | | ஜொகர்னஸ் பேர்க் | பகல் | 1.00 |


உ

# திருமண வாழ்த்து

இல்லறமாம் நல்லறத்தில் இன்று இனிதே இணையும் புதுமண மக்கள்



திருவளர் செல்வன்
Dr.கிருஷ்ணேந்திரன்
(I.C.UNITE, யாழ்.போதனா வைத்தியசாலை)
அவர்களையும்

திருவளர் செல்வி
பிரஷாந்தினி
அவர்களையும்

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"*

என்ற வான் புகழ் வள்ளுவரின் திருவாக்குக்கிணங்க பதினாறு பேறுகளும் பெற்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆங்கில வைத்தியசாலை
*Dr. முருகானந்தன் டிஸ்பென்சரி,*
*பிரதான வீதி, பருத்தித்துறை*

(13705)

நிர்வாகம்,
டாக்டர்களும், ஊழியர்களும்.


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1933 - 01 - 26

இறப்பு
1999 - 01 - 27

### அமரர்
### திருமதி நல்லம்மா சிற்றம்பலம் (காந்தி)

**ஆண்டுகள் நான்கு சென்றாலும்**
**உம் நினைவினில் நின்று என்றும்**
**நீங்கமாட்டோம் அம்மா!**

*சந்தா தோட்டம்,*
*புலோலி கிழக்கு,*
*புலோலி.*

(13766)

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.**

---

## Late
## Mrs.Gnanamony Duraisingam
(Ranji Teacher)

On behalf of our Two Sons and I sincerely Thank all who attended the funeral of Late Mrs.G.Duraisingam on 18.01.2003 and those Attended on her at the Hospital, Home, Sent Messages of Condolences, Floral Tributes and from Rehabilitation division and Friends Depar tment, Jaffna. Please Accept our Best Wishes in God's Grace. We thank you for your kindness and help rendered on that occasion.

*Gnanapathie,*
*Kopay Centre,*
*Kopay.*

Informant:
**Duraisingam**(Husband)

(13748)

---

# மரண அறிவித்தல்கள்

### சிவக்கொழுந்து பரமராசா (ஓய்வூதியர்)
*(சிறுப்பிட்டி வடக்கு)*

பாண்டியன்தாழ்வு, சந்தனமாதா கோயில் லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து பரமராசா நேற்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - கமலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மா (ஓய்வூதியர்) அவர்களின் அன்புக் கணவரும், பாமினி (கனடா), சாமினி (ஜேர்மனி), தயானி ஆகியோரின் அன்புத் தந்தையும், கவியரசன் (கனடா), ரமேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுஜீவன் (கனடா), சங்கீத் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் பாக்கியலட்சுமி, கனகவதி, கனகாம்பிகை, சுப்பிரமணியம், ருக்குமணி (ஜேர்மனி), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நடராசா மற்றும் ஆறுமுகம், குமாரசூரியர், தெட்சணாமூர்த்தி, ரத்தினகுமாரி (ஜேர்மனி), பவானி, காலஞ்சென்ற இராசமணி மற்றும் பாக்கியம், பொன்னம்மா, செல்வி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், முத்தையா, தம்பியையா மற்றும் மகேந்திரன் (சாலைப் பரிசோதகர், கோண்டாவில் சாலை) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2003) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சிறுப்பிட்டி கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.*

(13768)

தகவல்:
**பிள்ளைகள்.**

---

### கதிரேசு முருகேசு

இடைக்குறிச்சி, வரணியைப் பிறப்பிடமாகவும் எருவன், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு முருகேசு நேற்று முன்தினம் (25.01.2003) சனிக்கிழமை குவைத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும் பத்மநந்தினி, ஜெயக்குமார்(கனடா), அசோக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசம்மா, நடராசா (C.T.B. சாரதி யாழ்), இராசமலர், இராஜேந்திரம் (புகையிரதப் பகுதி. வவுனியா) ஆகியோரின் சகோதரனும் கனகதுரையின் (பிரதேச சபை. சாவகச்சேரி) மாமனாரும் தர்ஷன், தசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*எருவன்,*
*கொடிகாமம்.*

(13767)

தகவல்:
மு.அசோக்குமார் (மகன்)

# கந்தரோடைக்கு குடி தண்ணீர் வழங்க பிரதேச சபை தயாராகவே உள்ளது

## வலி. தெற்கு பிரதேச சபை செயலர் தெரிவிப்பு

வலிகாமம்தெற்கு,ஜன.27

கந்தரோடை கிராமத்துக்கு குழாய்கள் மூலம் நல்ல தண்ணீர் வழங்கும் பொறுப்பை தேசிய நீர்வழங்கு வடிகாலமைப்பு சபையினர் எம்மிடம் கையளித்தால் அதனை ஏற்க நாம் தயாராக உள்ளோம்.

- வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர் இராசா தணிகாசலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கந்தரோடை சனசமூகநிலையம், ஸ்ரீசுப்பிரமணிய வாசிகசாலை ஆகியவற்றின் கீழ் இயங்கும் சிறுவர் முன்பளிக்கான புதிய கட்டட திறப்பு விழாவில கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கந்தரோடை கிராமத்தில் குழாய்கள் மூலம் நீர் வழங்கும் திட்டத்தை யாழ்.தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர். குழாய்கள் புனரமைக்கப்பட்டு புதிய குழாய்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு நல்ல தண்ணீர் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

குழாய்களைப் பேணவும் பாதுகாகவும் திருத்தம் செய்யவும் என குடிதண்ணீர் பாவனையாளர்களிடம் இருந்து மாதாந்தம் ஒரு தொகைப் பணத்தை நீர் வழங்குசபையினர் வசூலிக்க ஆரம்பித்ததை கந்தரோடை கிராம மக்கள் பலர் எதிர்த்து வந்தனர்.

குடிதண்ணீர் திட்டம் ஆரம்பித்த காலத்தில் நீர் விநியோகத்தை சுன்னாகம் பட்டின சபையினர் கையேற்று இலவசமாகவே வழங்கி வந்தனர் எனவும், மீண்டும் அப்பொறுப்பை சுன்னாகம் பிரதேச சபையினர்ஏற்று நடத்தவேண்டும் எனவும் பொது மக்கள் கேட்டுக்கொண்டதை அடுத்தே பிரதேச சபை செயலாளர் இவ்வாறு பதிலளித்தார்.

அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் வலி-தெற்கு பதில் உதவி பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

கந்தரோடை கிராம சேவையாளர் க.திருநாவுக்கரசு,ஓய்வு பெற்ற அதிபர் சி.சிவசரவணபவன்(சிற்பி) ஆகியோரும் உரையாற்றினர்.

கட்டடத்தை நிர்மாணித்த மகாதேவன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (ஜ-152)

### பொதுக்கிணற்றுள் மனிதக்கழிவு

## ஊரத்தி பகுதி மக்கள் குடிதண்ணீர் இன்றி அவதி

வலி.மேற்கு,ஜன.27

அராலி ஊரத்தி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கடந்த சில தினங்களாக குடிதண்ணீர் இன்றி பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஊரத்தி கிராமத்தில் பொது மக்களால் குடிதண்ணீர் பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த கிணற்றுக்குள் விஷமிகள் சிலர் மனிதக் கழிவுகளைக் கொட்டியமையால் கிணற்று நீர் மாசடைந்துள்ளது. இதனால் பொது மக்கள் குடிதண்ணீரைப் பெறமுடியாமல் அவதிப்படுகின்றனர் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை -

மேற்படி விவகாரம் குறித்து ஊரத்திப்பகுதி மக்கள் அப்பகுதி கிராம அலுவலரிடமும், வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கிராம அலுவலர் சங்கானைப் பிரதேசசெயலரைக் கேட்டுக்கொண்டதை அடுத்து அவர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (எ-175)

## *கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சி பணியாளர்களின் கைகளில் தான்*

### சங்கத்தலைவர் தெரிவிப்பு

அரியாலை,ஜன.27

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வியாபார நடவடிக்கைகளை பெருக்குவது சங்கப் பணியாளர்களின் கைகளிலேயே தங்கி உள்ளது. பணியாளர்கள் தங்களை அர்ப்பணித்து உழைப்பதே இதற்கு சிறந்த வழி.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி.வி.கே சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பணியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே சி.வி.கே.சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அபிவிருத்தி செய்வதாயின் சங்கத்தின் வியாபர நடவடிக்கைகளைப் பெருக்க வேண்டும். இதற்கு சங்கத்தின் ஒவ்வொரு பணியாளரது ஆக்கமும் ஊக்கமும் அவசியம்.

கூட்டுறவு என்பது ஒரு குடும்பம் என்று நினைத்து சகல பணியாளர்களும் ஒன்றிணைந்து இது எமது சங்கம் என்று நினைத்து வியாபார நடவடிக்கைகளை பெருக்கி சங்க அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு கூட்டாக செயற்படுவதே சிறந்தது- என்றும் அவர் தெரிவித்தார்.

சங்கத்தின் உப தலைவர் பொ. ஜேக்கப் இயக்குநர் குணநாயகம், பொது முகாமையாளர் மு.தெய்வேந்திரன், கணக்காளர் பாலசண்முகநாதன், வர்த்தக முகாமையாளர் எஸ். அன்னராஜா, ஆளணி முகாமையாளர் கே.மனோகரன் ஆகியோரும் கலந்துரையாடலில் உரையாற்றினர்.


யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கத் தெரிவுக் கூட்டம் - 2003

இடம்: : பாடசாலை மண்டபம்

காலம்:: : 29.01.2003 புதன் பி.ப 12.30 மணி

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

(13778) - அதிபர்.



கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் த.டினேஸ்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்

கேசவப்பிள்ளை தனபாலசிங்கம் அவர்கள்.

இயற்கை எய்தியதையிட்டுத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*மொறட்டுவ பல்கலைக்கழகம், மொறட்டுவ.* (13775) 2 ஆம் வருட மாணவர்கள்



மரண அறிவித்தல்

திருமதி சரவணமுத்து நாகம்மா

லக்சுமி இல்லம், கிணற்றடிப்புலம், நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சரவணமுத்து நாகம்மா நேற்று (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2003) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*நவிண்டில் கரணவாய் வடக்கு, கரவெட்டி.* (13776)

ச.மகேந்திரன் (மகன்)

ச.குலேந்திரன் (மகன்)

மகாலட்சுமி நகைமாடம்நெல்லியடி.


### அபிராமிப்பட்டர் திருவிழா

சுழிபுரம்,ஜன.27

அபிராமிப்பட்டர் திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பகல் பத்து மணிமுதல் அம்பாளுக்கு அபிஷேகம் இடம்பெற்று, அபிராமி அந்தாதி நூறுபாடல்களும் ஓதப்படுவதைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் காட்சி நடைபெறும்.

### ஆலயத்துக்கு ராஜகோபுரம்

அரியாலை,ஜன27

நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு இராஜ கோபுரம் அமைப்தற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த இராஜகோபுரம் பல லட்சம் ரூபா செலவில்நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-17)

### மாடிக்கட்டடம் நிர்மாணம்

கரவெட்டி,ஜன.27

புற்றளை மகாவித்தியாலயத்தில் மாடிக்கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேற்படி வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையினர் 6லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

இந்தக்கட்டடத்தை பாடசாலை நிர்வாகத்திடம் சம்பிரதாயமுறைப்படி கையளிக்கும் வைபவம் எதிர் வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (எ-4-70)


லக்சுமி இணுவில்

மாதவன், ரிமாஜன்.பின், பருவாசன், விவேக்

ரன் (ரீலிஸ்)

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்ரேயா, வடிவேல்

வசீகரா

காட்சிநேரம்: 10.30, 2.40, 6.30, 9.30

ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சிந்து நடித்த

நெஞ்சினிலே

காட்சி. - 11.00, 2.45, 6.00 (பு.நே.)

இரவு 6.45 மட்டும் (பு.நே.)

TOMB RAIDER

நாகம்ஸ் சுன்னாகம்.

சூர்யா, ஜோதிகா, சிவகுமார், ரகுவரன் நடித்த

உயிரிலே கலந்தது

காட்சிகள் தினசரி: 11.10, 3.00, 6.10 (பு.நேரம்).

(இனிய பாடல்கள் நிறைந்த படம்)


# யுவதியைக் கேலிசெய்த வாலிபர் நையப்புடைப்பு!

## கலாசாரத்தைப் பேணுவோர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.27

யுவதி ஒருவரை வீதியில் கிண்டல் செய்த வாலிபர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் ஒருவரிடம் சிக்கினார். 'கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் உறங்குகிறார்கள் என்றா நினைத்தாய்' எனக் கேட்டுக்கேட்டு வாலிபர் நையப்புடைக்கப்பட்டார்.

நேற்றிரவு நல்லூர் சட்டநாதர் வீதிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. வீட்டுக்குச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யுவதியை மற்றொரு சைக்கிளில் கிண்டல், கேலியாகப் பேசிக்கொண்டு வாலிபர் ஒருவர் பின்தொடர்ந்தார். யுவதியின் வீடு வரை தொடர்ந்த வாலிபர் வீட்டு வாசலில் நின்று கேலி செய்துவிட்டுச் சென்றார்.

இவையனைத்தையும் அவதானித்த கலாசாரத்தைப் பேணும் இளைஞர் ஒருவர் அந்த வாலிபரை அழைத்து, யுவதியின் வீட்டு வாசலில் வைத்து நையப்புடைத்தார். "கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் உறங்குகிறார்கள் என்ற நினைப்பிலா இப்படி நடந்து கொள்கிறீர்கள்?" என்று கேட்டுக் கேட்டே வாலிபர் நையப்புடைக்கப்பட்டார். (ஒ)

# வழுக்கையாற்று புனரமைப்புக்கென இவ்வருடம் ரூ.9லட்சம் நிதி ஒதுக்கீடு

வலிகாமம் தெற்கு,ஜன.27

வழுக்கையாற்றுப் புனரமைப்புத் திட்டச் செயற்பாடுகளுக்கென நீர்ப்பாசன திணைக்களத்தினால் இவ வருடம் ஒன்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு வேலைத் திட்டத்தில் வழுக்கையாற்றுப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு மானிப்பாய் மேற்கு விவ சாய சம்மேளனத்தினர் நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் காமினி விக்கிரமபெருமாவிடம் வேண்டுகோள விடுத்திருந்தனர்.

வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டத்தில் 13வேலைத்திட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அவர்கள் கேட்டிருந்தனர்.

விவசாயம் மற்றும் நிதி தொடர்பான அமைச்சுகளுக்கும் அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமும் இவ் வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கித் தருமாறு கோரப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்ட பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்தவராசா, மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் ரி.கணேசராசா ஆகியோர் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினருடன் இணைந்து வழுக்கையாறு புனரமைப்பு தொடர்பான 13வேலைத் திட்டங்களைத் தயாரித்திருந்தனர்.

இது தொடர்பாக, யாழ.நீர்ப்பாசனத் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுத்து அதன் புனரமைப்புக்கு இவ்வருடம் 9லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக விவசாய சம்மேளனத்தினருக்கு அறிவித்துள்ளது.

ஐந்துகண் மதவடியிலிருந்து வழுக்கையாற்றின் மருங்கிற்கு 800 அடிக்கு சுவர் கட்டவும், வீதியை உயர்த்தவும் வயல்களில் இருந்து தண்ணீர் ஆற்றுக்கு செல்வதற்கேற்ற குழாய்கள் அமைக்கவும் என ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சிராய்க்குளத்தில் வீதி வாய்க்கால் அமைக்க 40ஆயிரம் ரூபா.

★ அரசடிவீதி புனரமைப்புக்கு 60ஆயிரம் ரூபா.

★ சிராய்க் குளத்தின் இடிகுண்டடியில் பாலம் அமைக்க 4லட்சம் ரூபா.

★ பண்டத்தரிப்பிலுள்ள அந்திரான் குளத்தில் பாலம் போட 3லட்சம் ரூபா என ஒன்பது லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி வேலைத்திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு போதாது என்றும் -

முழுத்திட்டத்தையும் செயற்படுத்தக்கூடிய வகையில நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தினர் மீண்டும் கோரியுள்ளனர். (எ-152)

# வி.பி.கிண்ண கிரிக்கெட் போட்டி; ஆஸ்திரேலிய அணி வெற்றி!



பிரட்லீ

மெல்போன்,ஜன.27

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற வி.பி. கிண்ணத்துக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இரண்டாவது இறுதி ஆட்டத்திலும் வெற்றியீட்டியதன் மூலம் ஆஸ்திரேலிய அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மெல்போர்னில் நடைபெற்ற பரபரப்பான இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களை பெற்றது. அணியின் சார்பில் பிரட்ஹொக் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும் கைடன் 69 ஓட்டங்களையும் கில்கிறிஸ்ட் 25 ஓட்டங்களையும் பெற்றனர். இங்கிலாந்து அணியின் சார்பில் இரானி 3 விக்கெட்டுகளையும், கடிக் 2 விக்கெட்டுகளையும் பிளின்ரொவ், அண்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கட்டையும் வீழ்த்தினார்கள்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளை இழந்த போதும் அடுத்து வந்த மைக்கல் வோகனும் அணித்தலைவர் நாசர் ஹுசேனும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார்கள். 88 ஓட்டங்களை அணி எடுத்திருந்த நிலையில் நாசர் ஹுசேனும் ஆட்டமிழந்தார். அடுத்து துடுப்பெடுத்தாட வந்த அலெக்ஸ் ஸ்டுவேட், மைக்கல் வோகனுடன் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை கணிசமாக உயர்த்திய போதும் இருவரும் தலா 60 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர்.

வெற்றி பெறக்கூடிய நிலையில் சென்று கொண்டிருந்த இங்கிலாந்து அணி இவர்கள் ஆட்டமிழந்த பின்னர் 42 ஓட்டங்களுக்கு இறுதி 4 விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்து. ஆஸ்திரேலிய அணியின் சார்பில் பிரட்லீ 5 விக்கெட்டுகளையும் ஷேன் வோன் 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்கள் ஆட்டநாயகனாக பிரட்லீ தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-10)

# மருதங்கேணியில் 600 வீடுகள் அமைப்பதாக அரச அதிபர் உறுதி

## சமுர்த்தி வங்கி திறப்புவிழாவில் உரை

வடமராட்சி,ஜன.27

நிதி கிடைத்ததும் மருதங்கேணிப் பிரதேசத்தில் 600 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

- மருதங்கேணியில் கடந்த 18 ஆம் திகதி சமுர்த்தி அபிவிருத்தி வங்கியை திறந்து வைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசஅதிபர் செ.பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வைபவம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் யாழ்.அரசாங்க அதிபர் உரையாற்றும் போது -

மருதங்கேணிப்பிரதேசத்தில் வங்கிகள் எதுவும் இல்லாத காரணத்தினாலேயே, முன்னுரிமை கொடுத்து இவ்வங்கி திறந்து வைக்கப்படுகின்றது. இப்பிரதேசத்தில் சமுர்த்தி வங்கி திறக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தியபோது அமைச்சர் அதனை ஏற்று தனது அங்கீகாரத்தை வழங்கினார். அமைச்சரும் இவ்வங்கி திறப்பு விழாவில் கலந்து கொள்ள இருந்தார். இறுதி நேரத்தில் அவர் வர முடியாமல் போன போதிலும் வங்கி திறக்கப்பட வேண்டும் என கோரினார்.

இப்பகுதிகளில் யுத்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகள் மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்திய சாலை ஆகியனவற்றை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருத்தித்துறை - மருதங்கேணி வீதியும் திருத்தப்படும் 600 வீடுகள் இப்பிரதேசத்தில் கட்டிக் கொடுப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன. நிதி கிடைத்ததும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இப்பிரதேசமக்கள் கடின உழைபாளிகள். ஆனால், அவர்களிடம் சேமிப்பு பழக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. இவர்களை வறியவர்கள் எனக்கூறமுடியாது. இவ்வங்கியினை நல்ல முறையில் பயன்படுத்தி இம்மக்கள் நன்மை அடைய வேண்டும் - என்றார்.

யாழ்.மாவட்ட பிரதி சமுர்த்தி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் உரையாற்றும் போது -

சமுர்த்தி அபிவிருத்தி வங்கி மக்களுடையது. இதற்கு பணிப்பாளர் சபை எதுவும் கிடையாது. இவ்வங்கியில் 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபாவரை கடனைப் பெற்று மக்கள் நன்மையடையலாம் - என்றார்.

இவ்வைபவத்தில் கடற்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த யாழ் மன்னன், வடக்கு - கிழக்கு மாகாண சமுர்த்தி ஆணையாளர் எஸ்.நடேசராசா, வடமராட்சி கிழக்கு கல்விக்க முகப் பொறுப்பாளர் தாயகன், வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழுத்தலைவர் சி.பொன்னம்பலம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இறுதியாக சமுர்த்தி முகாமையாளர் ஏ.ரவிச்சந்திரன் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

(ஐ-182)



அண்மையில் யாழ். கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரத்தின் "தமிழ் இலக்கணப் பூங்கா" நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்த பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களிடம் இருந்து ஆசிரியர் கணேசானந்தன் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். அருகில் நூலாசிரியர் காணப்படுகிறார். (ஐ)

# மகளிர் மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட்:

மகளிர் அணிகளுக்கிடையிலான சர்வதேச கிரிக்கெட் போட்டி நியூஸிலாந்தில் நடைபெறுகின்றது.

மினி உலகக் கிண்ணப் போட்டி என இச்சுற்றுப் போட்டி அழைக்கப்படுகிறது. உலகின் முன்னணி மகளிர் அணிகளான ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, இந்தியா ஆகியன இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

இத்தொடரின் முதலாவது போட்டி நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் தற்போதைய உலக சாம்பியன் அணியான நியூஸிலாந்து அணியை ஆஸ்திரேலியா 63 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா, 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 223 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

போட்டி அட்டவணை பின்வருமாறு:

ஜன.26:நியூஸிலாந்து-ஆஸ்திரேலியா
ஜன.27:இங்கிலாந்து-இந்தியா
ஜன.28:நியூஸிலாந்து-இந்தியா
ஜன.29:இங்கிலாந்து-ஆஸ்திரேலியா
ஜன.30:நியூஸிலாந்து-இங்கிலாந்து
பெப்.01:ஆஸ்திரேலியா-இந்தியா
பெப்.02:நியூஸிலாந்து-இந்தியா
பெப்.02:ஆஸ்திரேலியா-இங்கிலாந்து
பெப்.03:நியூஸிலாந்து-இந்தியா
பெப்.04:ஆஸ்திரேலியா-இந்தியா
பெப்.06:நியூஸிலாந்து-ஆஸ்திரேலியா
பெப்.06:இங்கிலாந்து-இந்தியா
பெப்.07:மூன்றாமிடத்திற்கான போட்டி
பெப்.08:இறுதிப்போட்டி
பெப்.09:மேலதிக நாள்

(ஐ)



புதிதாகக் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அப்போது கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் பொங்கல் விழாவை ஆரம்பித்துவைப்பதை படத்தில் காணலாம்.

*(படம்: வலி கிழக்கு செய்தியாளர்)*

# 'சுப்பர் சிக்ஸ்' சுற்றுக்குத் தகுதிபெறும் வரை இந்திய வீரர்களின் மனைவியருக்குத் தடை!

"உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் ஆரம்பக் கட்டத்தில் இந்திய அணி வீரர்களுடன் அவர்களின் மனைவியர் மற்றும் காதலிகள் தங்குவதற்கு, அனுமதிக்கப்படமாட்டார்கள்."

-இவ்வாறு இந்தியக் கிரிக்கெட் சபைத்தலைவர் ஜக்மோகன் டால்மியா நேற்று அறிவித்தார். நேற்று நடைபெற்ற முக்கிய கலந்துரையாடலொன்றின் பின்னர் டால்மியா இத்தீர்மானத்தை அறிவித்தார்.

இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி,பயிற்றுநர் ஜோன் ரைட் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

எனினும் சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குத் தகுதி பெற்ற பின் வீரர்களுடன் மனைவியர், காதலிகள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவர் என்று டால்மியா கூறினார்.

இந்திய வீரர்கள் நாளை மறுதினம் தென்னாபிரிக்காவுக்கு புறப்படவுள்ளனர்.

இதேவேளை தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துக்கான சோதனையில் இந்திய வீரர்கள் அனைவரும் சித்தி பெற்றுள்ளனர். என அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தின் சுற்றுலாவின் இறுதிக்கட்டத்தில் இந்திய வீரர்களிடம் ஊக்க மருந்து சோதனைக்காக சிறுநீர் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சோதனையில்வீரர்கள் எவரும் ஊக்க மருந்து பாவித்துள்ளதாகக் கண்டறியப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## படையினருக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் குடியிருப்பது அநீதியானது - என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

அதியுயர் பாதுகாப்பு வலய பிரகடனம் காலாவதியாகி 2 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அதி உயர பாதுகாப்பு வலயத்துக்குள் வீடுகளை உடையவர்கள் தமது வீட்டில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் எனக் கூறி வழக்குத்தாக்கல் செய்யலாம்.

பொது மக்கள் எவராவது முன்வந்தால் வழக்குத் தாக்கல் செய்வதற்கு - நான் தயாராக உள்ளேன் - என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் கரையோரப் பகுதிகளை மாத்திரம் அதி உயர் பாதுகாப்பு வலயமாக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் 22.05.2002 அன்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பிரகடனப்படுத்தினார்.

ஆனால், இதனை நாடாளுமன்றம் இன்னமும் அங்கீகரிக்கவும் இல்லை என்றும் விநாயகமூர்த்தி தெரிவித்தார். (ஐ-2)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகளின் முன்னேற்றங்கள் குறித்தும் பேசப்பட்டன. என்று தெரியவருகிறது. இங்கு பெறப்பட்ட தகவல்கள் 30 ஆம் திகதி வவுனதீவு பிரதேச செயலகத்தில் நடைபெறும் புலிகளுடனான சந்திப்பின் போது தெரிவிக்கப்படும் எனத்தெரியவந்துள்ளது.

(ஐ)

## இறந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கு விசாரணையின் போதே நீதிவான் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமையவே படையினரின் சடலங்கள் எரிக்கப்பட்டதாக மன்றில் ஆஜரான படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து எரிக்கப்பட்ட படையினருக்கு கொழும்பில் மரியாதை செலுத்தும் நிகழ்வை நடத்துவது குறித்து தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு பரிசீலிக்குமாறு ஆலோசனை கூறி வழக்கினை மூன்று மாதங்களுக்கு நீதிவான் ஒத்திவைத்துள்ளார். (ஐ-9)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகள் என்ற பெயரில் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அரசுக்கு முறைப்பாடு செய்த போதிலும் எவ்வித பலனும் கிடைக்காததால் யுனெஸ்கோ நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்ய நேர்ந்தது.

இவ்வாறான நிலையில் பௌத்த விகாரைகளைப் பாதுகாக்க இந்திய அரசு முன்வந்திருப்பது சிறந்த செயலாகும். இதற்கென நாம் இந்திய அரசுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)


## காணி தேவை

கோண்டாவிலில் இயங்கும் தாயகம் சிறுவர் இல்லத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் இராசபாதையை அண்மித்து 30 - 40 பரப்பு காணி தேவைப்படுவதால் விற்க விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

சிறீஅமலா ஜீவலர்ஸ்
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No. : 0777730567
(C/26248)

## தென்னிந்தியாவில் இருந்து



முதல்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி
மிலன்ஸ் மல்ரி கொம்பிளாக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA.
(13757)

பல வருடங்களின் பின் மீண்டும் யாழ் நகரில்
K.R.S.No- 1 றோஸ் நாடு
K.R.S.No- 1 சம்பா
எல்லா வர்த்தக ஸ்தாபனங்களிலும் கிடைக்கும். (13655)

A/L 2004
LOGIC
☆பகுதி - II (விஞ்ஞானமுறை)
☆குறியீட்டு அளவையியல்
எஸ்.எஸ்.மனோகரன்
20 புதன் மாலை 5மணி (13761)
FURTHER EDUCATION
(உடுவில் மகளிர் கல்லூரி)


## மரண அறிவித்தல்

### திருமதி உருக்குமணி சதாசிவம்பிள்ளை

*(இறுதிக்கிரியை திகதி மாற்றம்)*

இன்று (27.01.2003) திங்கட்கிழமை நடைபெறுவதாக இன்றைய உதயன் பத்திரிகையின் 11ஆம் பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ள இறுதிக் கிரியைகள் யாவும் நாளை (28.01.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி கலைச்செல்வி சுதாகரன் (மகள்)

மடத்தடி ஒழுங்கை,
கந்தர்மடம்.
(13777)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.